E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஜூலை 22 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 172 | Saturday 22, July, 2023 | 11 பக்கங்கள்

## மொனராகலையில் நேற்று நிலநடுக்கம்

### 2.6 ரிச்டர் அளவில் பதிவு, பாதிப்புகள் இல்லை




மொனராகலை மாவட்டத்தில் நேற்றுக் (21) காலை 9.06 மணியளவில் சிறிய நில நடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

2.6 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக, புவிச் சரிதவியல் அளவை 06

### பிரதமர் நரேந்திர மோடியுடனான கலந்துரையாடல் அடுத்த 25 வருடகால உறவுக்கு அடித்தளம்

# இரு நாடுகளினதும் நல்லுறவுக்கு ஆழமாக அடித்தளமிட்ட பயணம்

## புதுடில்லியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நாம் நடத்திய கலந்துரையாடல், இலங்கை இந்தியாவின் அடுத்த 25 வருடங்களுக்கான அடித்தளத்தை இடுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பரஸ்பர பொருளாதார உறவுகள் தொடர்பாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்தும் எதிர்கால இந்திய இலங்கை பொருளாதார பங்காளித்துவத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான வரலாற்று மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்துமெனவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தின் போது ஊடகங்களுக்கு நேற்று (21) கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தூதுக்குழு, இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை டெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் சந்தித்த போது...

**விமான சேவைகள்; கடல்வழிப் போக்குவரத்து; எரிசக்தி, மின்சாரம்; வர்த்தகம், பொருளாதாரம்; நிதி விவகாரங்கள் மற்றும் தனிப்பட்ட உறவுகள் ஆகிய 05 துறைகள் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இரு தலைவர்களும் அவதானம்**

தெரிவித்தார். இலங்கை பொருளாதார சீர்திருத்தங்களை சீராக அமுல்படுத்தி வருவதாகவும் இந்தியப் பிரதமருடனான தூதுக்குழு மட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் மூலம் நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கான சாதகமான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, எடுக்கப்பட்ட தீர்மானங்களின் மூலம் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்த வழிவகுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். இந்திய ஊடகங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துகள் வருமாறு,

"பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் புதுடில்லிக்கு வருவதை கௌரவமாக கருதுகிறேன். கடந்த ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நான் இந்தியாவுக்கு முதல் முறையாக வருகை தந்திருக்கிறேன். இந்த பயணம் எனக்கும் எனது அரசாங்கத்துக்கும் மிக முக்கியமான பயணம் 06



# கௌதம் அதானியுடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

### துறைமுகம், மின்னுற்பத்தி திட்டங்கள் குறித்து பேச்சு



இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் பெரும் செல்வந்தரான கௌதம் அதானியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கொழும்புத் துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தி, 500 மெகாவோட் காற்றலை மின்னுற்பத்தி திட்டம் மற்றும் பசுமை ஐதரசன் திட்டம் ஆகியன தொடர்பாக கலந்துரையாடியதாக, கௌதம் 06

### நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட

# எத்தகைய சவாலையும் எதிர்கொள்ள அரசாங்கமும் ஜனாதிபதியும் தயார்

### நாடு பின்னோக்கி செல்வதையே சிலர் விரும்புகின்றனர்

**சபையில் பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்றத்தில் ஒரு தரப்பினர் நாடு மீண்டும் கடந்த 15 மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலையை தோற்றுவித்து, தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கிலேயே செயற்படுகின்றனரென, பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து சவால்களுக்கும் முகம் 06

### அனைத்து அரச வைத்தியசாலைகளும் பாதுகாப்பான சேவையில்

# வைத்தியசாலைகளுக்கு செல்ல எவரும் அச்சப்பட வேண்டாம்

**சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr. அசேல குணவர்த்தன**



அனைத்து அரச வைத்தியசாலைகளும் பாதுகாப்பான முறையில் இயங்குவதுடன், நோயாளர்களை பாதுகாப்பதற்கு சுகாதார அமைச்சு பொறுப்புடன் செயற்படுவதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மருந்துகளின் தரம் தொடர்பாக நோயாளர்களுக்கு 06

### விவாக, விவாகரத்து சட்டங்களில் திருத்தம்

# முஸ்லிம் தனியார் சட்டத்தில் விரைவில் சுமுகமான தீர்வு

### நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ உறுதி



முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள அறிக்கை மற்றும் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தலைமையிலான குழுவினர் தயாரித்து வழங்கியுள்ள அறிக்கை கவனத்தில் கொள்ளப்பட்டு சுமுகமான தீர்வு எட்டப்படுமென, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவிடம் முன்னாள் 06

# சரத் வீரசேகர MP இனவாதம் கக்குவதை நிறுத்த வேண்டும்

**சபையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தமிழ் மக்கள் தொடர்ந்தும் மௌனம் காக்க மாட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அந்த மக்களை சீண்டிப் பார்க்கக்கூடாதென்று அவருக்கு தெரிவிப்பதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். சரத் வீரசேகர எம்.பி. தொடர்ந்தும் இனவாதத்தை கக்கினால், தமிழ் மக்கள் 06



**400 கிராம் பால்மா பக்கட் நேற்று முதல் விலை குறைப்பு** 03

ரூ. 31ஆல் விலை குறைத்து விற்பனை



**கொழும்பு துறைமுகத்தில் ஜப்பான் போர்க்கப்பல்** 03

195 பேர் பணியாற்றும் கப்பல், 151 மீற். நீளமானது



**இலங்கை தமிழர் விடயம்; தி.மு.க. இரட்டை வேடம்** 03

தமிழக தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு

# பாரவூர்தி குடை சாய்ந்து கோர விபத்து

**சாரதி, நடத்துநர் படுகாயம்**



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, பறநாட்டகல் பிரதேசத்தில் பாரவூர்தியொன்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில், அதன் சாரதி மற்றும் நடத்துநர் காயமடைந்துள்ளனர். நேற்று (21) அதிகாலை முறுகண்டியிலிருந்து வவுனியா நோக்கி வந்த இந்த 06

# சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு ஜனனதினம் அனுஷ்டிப்பு

### நேற்று யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வு



**யாழ். விசேட நிருபர்**

மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு ஜனனதின நிகழ்வும் ஆவண நூல் வெளியீடும், யாழ். கரவெட்டி சம்பந்தர் கடையடி மகேசன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது. 06

### ரூ.80 இலட்சம் பெறுமதியான

# 08 கிலோ அம்பருடன் இருவர் கைது



மாத்தறை பிரதேசத்தில் 80 இலட்சம் ரூபா பெறுமதியான 8 கிலோகிராம் அம்பருடன் இரண்டு சந்தேக நபர்கள், மாத்தறை குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் (20) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, மிரிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரும் வெலிகம பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பர் எனப்படும் பொருள் திமிங்கிலங்களின் உடலிலிருந்து பெறப்படுகிறது. 06

### கெஹெலியவுக்கு எதிரான

# பிரேரணை சபாநாயகரிடம் SJB யினரால் நேற்று கையளிப்பு



சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகரிடம் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கையளித்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்ஜித் மத்தும பண்டாரவால், சபாநாயகரிடம் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கையளிக்கப்பட்டது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தனவும் பிரசன்னமாகியிருந்தார். 45 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 06

# சர்வதேச செய்திகள்

## அழகு நிலைய தடைக்கு பெண்கள் ஆர்ப்பாட்டம்



ஆப்கானிஸ்தானில் அழகு நிலையங்களுக்கு தடை விதித்ததற்கு எதிராக பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை கலைக்க பாதுகாப்பு அதிகாரிகள் வானை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதோடு தண்ணீர் பீச்சியடித்துள்ளனர்.

பொது வாழ்வில் இருந்து பெண்களை முடக்கும் புதிய நடவடிக்கையாகவே தலிபான் அரசு அழகு நிலையங்களை மூடும் உத்தரவை பிறப்பித்திருந்தது.

கடந்த 2021 ஒகஸ்ட்டில் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் தலிபான் அரசு பெண்கள் உயர் கல்வி மற்றும் பல்கலைக் கழகங்கள் செல்வதை தடுத்ததோடு பூங்காக்கள், களியாட்டங்கள் மற்றும் உடற்பயிற்சி கூடங்களுக்கு செல்வது தடை செய்யப்பட்டது. பொது இடத்தில் தம்மை மறைத்துக் கொள்ளவும் உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் அழகு நிலையங்கள் மூடப்பட்டதால் ஆயிரக்கணக்கான பெண்கள் வருமானத்தை இழந்துள்ளனர். "எனது ரொட்டியையும் தண்ணீரையும் பறிக்க வேண்டாம்" என்று தலைநகர் காபுலில் கடந்த புதனன்று ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் பதாகையை ஏந்தி இருந்தார்.

சுமார் 50 பெண்கள் வரை கூடி இருந்த இந்த ஆர்ப்பாட்டத்தை கலைக்க பாதுகாப்புப் பிரிவினர் உடன் நடவடிக்கை எடுத்தனர்.

## மீண்டும் குர்ஆன் அவமதிப்பு: சுவீடனுக்கு கடும் எதிர்ப்பு




சுவீடனில் இரண்டாவது முறையாகவும் புனித குர்ஆன் அவமதிக்கப்பட்ட நிலையில் பல நாடுகளிலும் சுவீடன் தூதுவர்கள் அழைக்கப்பட்டு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்டொக்ஹோமில் கடந்த வியாழக்கிழமை (20) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முஸ்லிம்களின் புனித குர்ஆனை உதைத்து சேதப்படுத்தினர். இதன்போது ஆரம்பத்தில் அச்சுறுத்தியவாறு ஸ்டொக்ஹோம் ஆர்ப்பாட்டத்தில் குர்ஆன் தீ வைக்கப்படாதபோதும் பல முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளும் கோபத்தை வெளியிட்டு வருகின்றன.

இதனையோட்டி கடந்த வியாழக்கிழமை காலை பக்தாதில் உள்ள சுவீடன் தூதரகம் ஆர்ப்பட்டக்காரர்களால் தீ வைக்கப்பட்டிருந்தது.

ஸ்டொக்ஹோமில் ஆர்ப்பாட்டத்தை நடத்த ஏற்பாடு செய்த சுவீடனில் வசிக்கும் ஈராக்கிய கிறிஸ்தவ அகதியான 37 வயது சல்வான் மொமிகா கடந்த ஜூன் 28 ஆம் திகதி குர்ஆன் பக்கங்களை எரித்தது சர்வதேச அளவில் எதிர்ப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் புதிய செயலை அடுத்து ஈராக் தனது நாட்டின் சுவீடன் தூதுவரை வெளியேற்றியுள்ளது. சுவீடன் தூதுவரை நேற்றுக் காலை அழைத்த கட்டார் அரசு இந்த செயலுக்காக எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. சவூதி அரேபியா, துருக்கி, ஈரான் மற்றும் ஜோர்தான் நாடுகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

## கொலை குற்றவாளிக்கு விச ஊசி மூலம் மரண தண்டனை



சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் பெண் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்த 51 வயது ஆடவர் ஒருவருக்கு அமெரிக்காவின் ஒக்லஹோமா மாநிலத்தில் விச ஊசி செலுத்தப்பட்டு கடந்த வியாழக்கிழமை (20) மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மக்கலீஸ்டரில் உள்ள ஒக்லஹோமா மாநில சிறைச்சாலையில் ஜேமைன் கனொான் என்ற அந்த ஆடவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அன்றைய தினத்தில் மற்றொரு கொலை குற்றவாளியான 54 வயது ஜேம்ஸ் பார்பர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்படவிருந்தபோதும் அதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு விச ஊசி மூலம் மரண தண்டனை நிறைவேற்றுவதில் குழப்பம் ஏற்பட்டதன் பின்னர் ஒக்லஹோமா மாநிலத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது இது முதல் முறையாக இருந்தது.

இதில் இரு குழந்தைகளின் தாயான 20 வயது ஸரொன்டா கிளார்க் என்பவரை 1995 ஆம் ஆண்டு கொலை செய்ததற்காக கனொனுக்கு 1996 ஆம் ஆண்டிலேயே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

"ஸரொன்டா கிளார்க்கின் கொலையாளிக்கு இன்று (20) காலை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் மூலம் அவருக்கு நீதி நிலைநாட்டப்பட்டது" என்று ஒக்லஹோமா சட்டமா அதிபர் கென்ட்கர் ட்ரம்மன்ட் தெரிவித்துள்ளார்.

## விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை



இந்தியா பாஸ்மதி அல்லாத வெள்ளை அரிசி வகைகளின் ஏற்றுமதிக்கு உடனடித் தடை விதித்துள்ளது.

மோசமான பருவமழையால் இந்தியாவில் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளூர்ச் சந்தையில் அரிசி விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் போதிய அளவு அரிசி இருப்பதை உறுதி செய்யவும் ஏற்றுமதிக் கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக இந்திய உணவு அமைச்சு தெரிவித்தது.

உலகின் அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு 40 வீதத்துக்கும் அதிகமாக உள்ளது. ஏற்கனவே பணவீக்கத்தால் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்திருக்கும் நிலையில் ஏற்றுமதித் தடையால் அது மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது.

புழுங்கல் அரிசி ஏற்றுமதியைத் தடை செய்யப்படவில்லை என்று இந்திய அரசாங்கம் கூறியது. இந்தியாவின் முடிவால் ஆபிரிக்க நாடுகளே அதிகம் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. வெளிநாட்டு விற்பனையை குறைப்பதற்கு இந்திய அரசு கடந்த ஆண்டு 20 வீத ஏற்றுமதி வரியை விதித்திருந்தது.

இது கோதுமை மற்றும் சீனி ஏற்றுமதியை மட்டுப்படுத்த காரணமானது.

எனினும் உள்நாட்டில் விற்பதை விடவும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதால் இந்திய விவசாயிகள் அதிக லாபம் ஈட்டி வருகின்றனர். ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டபோதும் கடந்த காலங்களில் இந்தியாவில் அரிசி ஏற்றுமதி அதிகரித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு உலக உணவு விலை அதிகரிக்கக் காரணமாக இருந்தது.

சர்வதேச அளவில் அந்த நிலை தணிந்தபோதும் இந்தியாவில் மோசமான காலநிலை பல வட மாநிலங்களில் பயிர்கள் சோதமடைய காரணமானது. இதனால் தக்காளி மற்றும் வெங்காயம் உட்பட பல பயிர்களின் விலை வேகமாக அதிகரிக்கக் காரணமானது.

கடந்த மே தொடக்கம் ஜூன் வரை மரக்கறி விலை 12 வீதமாக அதிகரித்த நிலையில் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. கடந்த மாதம் இந்தியாவில் பண வீக்கம் 4.8 வீதமாக அதிகரித்தது. உணவு விலை அதிகரித்ததை அடுத்து எதிர்பார்க்கப்பட்டதை விடவும் இது அதிகமாக இருந்தது.

அடுத்த ஆண்டு இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பது இந்திய அரசுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் மாதங்களில் இந்தியா மாநில அளவில் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது.

## செய்தியாளர்களுக்கு உதவும் கருவியை கூகுள் சோதனை



செய்தியாளர்கள் தமது செய்திகளை அறிக்கையிடல் மற்றும் எழுதுவதற்கு உதவும் வகையில் புதிய செயற்கை நுண்ணறிவு கருவி ஒன்றை வடிவமைக்க செய்தி நிறுவனங்களுடன் இணைந்து கூகுள் பணியாற்றி வருவதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை இந்த திட்டம் பற்றி முதலில் செய்தி வெளியிட்டதோடு, இந்த புதிய தயாரிப்பு தொடர்பில் தி வொசிங்டன் போஸ்ட் மற்றும் தி வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் பத்திரிகையுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இக்கருவிகளால் பத்திரிகையாளர்கள் தங்களின் வேலை மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த முடியும். குறிப்பாக, தலைப்புகளுக்கும், அவர்கள் பயன்படுத்தும் எழுத்து வடிவங்களுக்கும் எண்ணற்ற வாய்ப்புகளை மென்பொருள் வழங்கும். இதிலிருந்து ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுத்து விரைவாக தங்கள் பணிகளை முடிக்க முடியும்.

ஆனால் கட்டுரைகளை உருவாக்குவதிலும், உண்மையை சரிபார்ப்பதிலும் பத்திரிகையாளர்கள் செய்யும் பணிகளுக்கு இந்த மென்பொருள் மாற்றாக அமையாது. ஆகையால் அவர்களின் வேலைக்கு எந்த பாதிப்பும் இருக்காது என தெரிகிறது.

கூகுளின் இந்த முயற்சி தற்போது ஆரம்ப கட்டத்தில் உள்ளது.

நியூயோர்க் டைம்ஸ் நிறுவனத்திடம் பரிசீலிக்கப்பட்ட கூகுளின் இந்த கருவி 'ஜெனிசிஸ்' என்று அழைக்கப்படுவதாக தெரிகிறது. அதன் ஆற்றல் செய்தி நிறுவன நிர்வாகிகளை வியப்பில் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

என்றாலும், புதிய கருவி செய்தியாளர்களின் முக்கியப் பங்களிப்புக்கு ஈடாகாது என்று கூகுள் நிறுவனப் பேச்சாளர் குறிப்பிட்டார். அது தலைப்புச் செய்திகள், பல்வேறு எழுத்து முறைகள் ஆகியவற்றைப் பரிந்துரைக்கக்கூடியது என்று அவர் கூறினார்.

## இந்தியா–கிர்கிஸ்தான் இடையே இணக்கப்பாடு




பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இந்தியாவும் கிர்கிஸ்தானும் இணக்கம் கண்டுள்ளன.


இந்திய தேசிய பாதுகாப்பு பிரதி ஆலோசகர் விக்ரம் மிஸ்ரி தலைமையிலான தூதுக்குழுவினர் கிர்கிஸ்தானின் பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் மராட் முகனோவிச் இமான்குலோவ் உடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கிர்கிஸ்தானுக்கான இந்திய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில், "இப்பேச்சுவார்த்தையின் போது பாதுகாப்பு தொடர்பில் இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அத்தோடு இரு நாடுகளும் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

அதற்கேற்ப பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கும் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடுவதற்கும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான பாதுகாப்பு ஒத்துழைப்பு கூட்டாண்மையை மேம்படுத்துவது குறித்து இரு தரப்பினரும் ஒரே விதமான கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர். அந்த அடிப்படையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு இரு தரப்பினரும் இணக்கம் கண்டுள்ளனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய ஆசிய நாடான கிர்கிஸ்தானுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரையும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு பிரதி ஆலோசகர் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளார்.

## விண்கல்லில் இருந்து வீசப்பட்ட பாறை துண்டுகள் அவதானிப்பு



விண்கல் ஒன்றின் மீது கடந்த ஆண்டு விண்கலம் ஒன்றை மோதவிட்டதால் பல டஜன் பாறை துண்டுகள் விண்வெளியில் வீசப்பட்டிருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா தெரிவித்துள்ளது.

ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியில் எடுக்கப்பட்ட படங்களில், இந்த மோதலுக்கு பின்னரான கற்பாறைகளின் திரள் ஒன்றை அவதானித்ததாக நாசா வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தாக்க இலக்கிலிருந்து பாறைகளின் மேகத்தை நாம் காண்கிறோம். பாறைகளின் எண்ணிக்கை, அளவு மற்றும் வடிவங்கள் அவை விண்கல்லின் மேற்பரப்பில் இருந்து வீச எறியப்பட்டவை போன்று தெரிகின்றன" என்று ஹப்பிள் தொலைநோக்கியை பயன்படுத்தி விண்கல்லில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானித்து வரும் கலிபோர்னி பல்கலைக்கழகத்தின் கிரகங்கள் தொடர்பான விஞ்ஞானி டேவிட் ஜெவிட் தெரிவித்துள்ளார்.

விண்கல்லின் பயணப்பாதையை திசைதிருப்பும் ஆய்வு ஒன்றாகவே டெடிமோஸ் என்ற குறுங்கோளை வலம்வரும் டிமோபோஸ் என்ற விண்கல் மீது 600 கிலோகிராம் எடை கொண்ட விண்கலம் ஒன்றை மோதவிட்டு சோதனை செய்யப்பட்டது. இந்த சோதனை வெற்றி அளித்ததாக அப்போது அறிவிக்கப்பட்டது.

இந்த மோதலால் விண்கல்லில் 160 அடி அகலம் கொண்ட பள்ளம் ஒன்று உருவாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

## தாய்லாந்தில் ஆட்சி அமைக்க 'பியு தாய்' கட்சிக்கு வாய்ப்பு



தாய்லந்தின் மூவ் போர்வட் கட்சி, அதன் கூட்டணியைச் சேர்ந்த பியு தாய் கட்சிக்கு அடுத்த அரசாங்கத்தை அமைக்க வழிவிட்டுள்ளது.

பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில பியு தாய் கட்சி நிறுத்தும் வேட்பாளர் யாராக இருந்தாலும் அவரை ஆதரிக்கப்போவதாக மூவ் போர்வட் கட்சியின் செயலாளர் சாய்தாவாத் துலாத்தோன் தெரிவித்தார்.

மூவ் போர்வட் கட்சி, பிரதமர் பதவிக்கு முன்னிறுத்திய 42 வயது பிட்டா லிம்ஜாரோன்ராட் அண்மையில் பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெறத் தவறினார்.

கடந்த 13ஆம் திகதி நடந்த முதல் வாக்கெடுப்பில் 8 கட்சிகளைக் கொண்ட கூட்டணி அவரை ஆதரித்தது. மீண்டும் அதற்கு அடுத்த வாரம் பிட்டா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை பாராளுமன்ற உறுப்பினர்கள் தடுத்துவிட்டனர். கடந்த மே மாதம் நடந்த தேர்தலில் 500 உறுப்பினர்களைக் கொண்ட கீழவையில் மூவ் போர்வட் கட்சிக்கு 151 இடங்களும் பியு தாய் கட்சிக்கு 141 இடங்களும் கிடைத்தன. மேலவையில் 250 செனட்டர்கள் உள்ளனர்.

அவர்கள் அனைவரும் இராணுவத்தால் நியமிக்கப்பட்டவர்கள். பிரதமராவதற்கு இரண்டு அவைகளிலும் சேர்த்துப் பாதிக்கு மேற்பட்டவர்களின் ஆதரவைப் பெற்றாகவேண்டும்.

பிட்டாவின் நியமனத்தை இராணுவத்துக்கு ஆதரவானவர்கள் தடுத்து நிறுத்தினர்.

## பெர்லினில் சுற்றித் திரியும் சிங்கத்தை பிடிக்க தேடுதல்



ஜெர்மனி தலைநகர் பெர்லினின் தென்மேற்கு புறநகர் பகுதியில் பெண் சிங்கம் ஒன்று சுற்றித் திரிவதான சந்தேகத்தில் பொலிஸார் தீவிர தேடுதலை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த புதன் (19) நள்ளிரவில் விலங்கு ஒன்றை அதானித்தது பற்றி வீடியோ மற்றும் தொலைபேசி அழைப்புகள் கிடைத்த நிலையில் உடன் தேடுதலை ஆரம்பித்ததாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறைந்தது 30 பொலிஸ் கார்கள் தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதோடு இந்த சிங்கத்தை தேடும் நடவடிக்கைக்கு உதவியாக கால்நடை மருத்துவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். நவீன கேமரா பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்களும் சுற்றி வருகின்றன. அந்த விலங்கு கண்டுபிடிக்கப்படும் வரை குடியிருப்பாளர்களை வீடுகளில் தங்கி இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெண் சிங்கம் காட்டுப் பன்றியைத் துரத்திச் செல்லும் வீடியோவை இருவர் பதிவு செய்திருந்தனர். அதைத் தொடர்ந்து அச்சம் பரவியது.

பெண் சிங்கம் எங்கிருந்து வந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை. விலங்குப் பூங்காக்கள், விலங்கியல் தோட்டங்கள் அல்லது சர்க்கஸ் குழுவிலிருந்து பிராணிகள் எதுவும் காணாமல் போனதாகத் தகவல் இல்லை.

சிங்கம் வனப் பகுதிக்குள் புகுந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 22 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.41
லுஹர் - 12.18
அஸர் - 03.43
மஃரிப் - 06.32
இஷா - 07.47

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆடி 06
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



ரூபா 31 ஆல் விலை குறைத்து விற்பனை

# 400 கிராம் பால்மா பக்கட் நேற்று முதல் விலை குறைப்பு



நானூறு கிராம் பால்மா பக்கட் ஒன்றின் விலை 31 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இதன் விலை குறைக்கப்பட்டுள்ளது. இந்த பால் மா விலைக் குறைப்பு தொடர்பாக லங்கா சதொச தலைவர் பசந்த யாப்பா தெரிவித்தார்.

இதன்படி, 400 கிராம் பால்மா பக்கட்டின் புதிய விலை 999 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாகாணசபை தேர்தல், மலையக மக்களுக்கான ஒதுக்கீடு; இரண்டும் பிரதமர் மோடி தந்த செய்தி

த.மு.கூ தலைவர் மனோ கணேசன்



சமத்துவம், நீதி, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் மாகாண சபை தேர்தல், இந்திய வம்சாவளி மலையக தமிழருக்கு இந்திய ரூபா 75 கோடி ஒதுக்கீடு ஆகியவை இந்தியப் பயணத்தில் பிரதமர் நரேந்திர மோடி எமது ஜனாதிபதிக்கு சொல்லி அனுப்பிய செய்தியென, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இவை இரண்டும் வெறும் கட்சி அரசியல், இனவாத அரசியல் ஆகியவற்றுக்கு அப்பால், நாட்டின் அரசியல் சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக பொறுப்பேற்று நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதுடன், இவற்றை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக கண்காணிக்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

இவை எதுவும் இலங்கையில் வாழும் தமிழருக்கும் மலையக தமிழருக்கும் முழுமையான தீர்வுகளை தந்து விடப் போவதில்லை. ஆனால், இவற்றை செய்தாவது இலங்கை அரசாங்கம் தனது நேர்மையை பறைசாற்ற வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய தலைவர்களின் சந்திப்பு மற்றும் இந்தியப் பிரதமரின் அறிவிப்புகள் தொடர்பாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் தெரிவித்த போது,

06

போதுமான தெங்கு உற்பத்தி கிடையாது

# தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்ய கொள்கையளவில் முடிவு

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டுக்கு தேவையான அளவு தேங்காய் உற்பத்தி நாட்டில் இல்லாத காரணத்தால் தேங்காய் எண்ணெய்யை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர்,

"நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்கள், நாட்டின் தேசிய நுகர்வுக்கும் கைத்தொழில்துறைக்கும் போதுமானதாக காணப்படவில்லை. அது தொடர்பாக தெங்கு அபிவிருத்தி சபை புள்ளிவிபரங்களுடன் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், நாம் தென்னை அபிவிருத்தித்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதும் அத்துடன், நாட்டுக்கு தேவையான தேங்காய்களை பெற்றுக்கொள்வதற்காக தேசிய தெங்குச் செய்கையாளர்களை பாதுகாப்பதும் அவசியமாகும்.

வரிகளை விதிப்பது நிதி அமைச்சின் பொறுப்பாகும். வர்த்தக அமைச்சர் என்ற வகையில் அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி, பரிந்துரைகளை என்னால் பெற்றுக்கொடுக்க முடியும். அதை நான் மேற்கொண்டுள்ளேன்.

அத்துடன், நிதி அமைச்சே நாட்டுக்கு பொருட்களை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கின்றது" என்றார்.

பிரமிட் கொடுக்கல், வாங்கல் தொடர்பில் விழிப்புணர்வு அவசியம்

# நுண்கடன் நிதி திட்டங்களால் கிராமப்புறத்து மக்கள் பாதிப்பு

கீழ்மட்ட மக்களை ஏமாற்றும் திட்டமிட்ட கும்பல்

லோரன்ஸ் செல்வநாயகம்

நுண்கடன் நிதி திட்டத்தால் கிராமப்புற மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், நுண்கடன் நிதி திட்டம் புற்றுநோய் போல் பரவியுள்ளதாக, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதனால் கீழ்மட்ட மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரமிட் கொடுக்கல், வாங்கல் தொடர்பாக பல கருத்துகள் முன்வைக்கப்பட்டன. ஆசிய வலயத்துக்குட்பட்ட சிங்கப்பூர் நாட்டில் முதலாவதாக பிரமிட் கொடுக்கல், வாங்கல் இடம்பெற்ற போது, 1973ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரமிட் கொடுக்கல் முறைக்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டு, அந்த முறைமைக்கு அங்கு தடை விதிக்கப்பட்டது.



அதனை தொடர்ந்து, பிரமிட் கொடுக்கல், வாங்கல் மலேசியாவுக்கு சென்றது. அங்கும் தடை விதிக்கப்பட்டதன் பின்னர், தற்போது இலங்கையில் இந்த முறைமை ஆதிக்கம் செலுத்தியுள்ளது. பிரமிட் கொடுக்கல், வாங்கல் முறைமை தொடர்பாக மத்திய வங்கி பல முறை அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது. ஆனால், அவற்றை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகவே, பாராளுமன்றத்தினூடாக அந்த முறைமைக்கு எதிராக சட்டம் இயற்ற வேண்டும்.

இதேவேளை, நுண்கடன் நிதி திட்டத்தால் கிராமப்புற மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுண்கடன் நிதி திட்டம் புற்றுநோய் போல் பரவியுள்ளது. இதனால் கீழ்மட்ட மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு

06

சுயாதீனமாக செயற்படும்

# எதிரணி எம்.பி.க்களை தெரிவு குழுவில் இணைக்க முடியாது

எதிர்க்கட்சியினருக்கு சபையில் சபாநாயகர் பதில்


லோரன்ஸ் செல்வநாயகம்

சுயாதீனமாக செயற்படும் எதிரணி உறுப்பினர்களை பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான தெரிவுக் குழுவில் நியமிக்க முடியாதென்பதுடன், ஏற்கெனவே அந்தக் குழுவில் அளவுக்கு அதிகமான பேர் அங்கம் வகிப்பதாகவும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிரணியினர் இது தொடர்பாக விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளித்த போதே, சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிரணியில் சுயாதீனமாக செயற்படும் 18 உறுப்பினர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களை பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான தெரிவுக்குழுவில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சபாநாயகரிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி மற்றும் எதிரணியின் சுயாதீன உறுப்பினர்கள் சபையில் வலியுறுத்தினர்.

அதற்கு பதிலளித்த சபாநாயகர்,



"பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் 16 உறுப்பினர்கள் அங்கம் வகிக்க வேண்டும். ஆனால், தற்போது 33 பேர் அக்குழுவில் உள்ளார்கள். மேலும், உறுப்பினர்களை அதில் இணைத்துக் கொள்ள முடியாதென்றும் அவ்வாறு இணைத்துக் கொண்டால் முழு பாராளுமன்ற உறுப்பினர்களையும் குழுவில் இணைத்துக்கொள்ள நேரிடும்" என்றார்.


பாராளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்சினை தொடர்பாக கேள்வி எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், இலங்கை மேலவை கூட்டணியின் உறுப்பினர்கள் எவரும் பங்குப்பற்றுவதில்லை. குழுவில் எடுக்கும் தீர்மானங்கள் எமக்கு தெரிவதில்லை. அந்த வகையில், எதிரணியில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களும் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான தெரிவுக்குழுவில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சபாநாயகரை கேட்டுக்கொண்டார்.

06

# குருந்தூர் அசோக விகாரை தொல்பொருள் சின்னமாகும்

சட்ட ஆலோசனைகளை பெற்று அமுலாக்க எதிர்பார்ப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டுள்ள அசோக விகாரையை பௌத்த தொல்பொருள் சின்னமாக பிரகடனப்படுத்துவதற்கு சட்ட ஆலோசனைகளை பெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, புத்தசாசன அமைச்சர் இதனை தெரிவித்தார்.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டுள்ள அசோக விகாரை பகுதியில் பொங்கல் பூஜை நடத்த தமிழ் அடிப்படைவாத அரசியல்வாதிகள் சிலர் முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

1931ஆம் ஆண்டு குருந்தூர்மலை அசோக விகாரை வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட போது, அது பௌத்த நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்ட போதிலும், அதனை இந்துக் கோயிலாக அடையாளப்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

எனினும், அங்கு இந்துக் கோயில் இருந்ததற்கான சான்றுகள் இல்லையென, பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர கூறினார்.

தொல்பொருள் திணைக்களம், அதனை பௌத்த தொல்பொருள் சின்னமாக பிரகடனப்படுத்த வேண்டும்.

06

# இலங்கை தமிழர் விடயம்; தி.மு.க. இரட்டை வேடம்

தமிழக தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு



இந்திரா காங்கிரஸ், தி.மு.க. கூட்டணி ஆட்சியின் தவறுகளை சரி செய்ய பிரதமர் நரேந்திர மோடியால் மட்டும்தான் முடியுமென்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டமைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழக பா.ஜ.க. சார்பில் நன்றி கூறுவதாக, தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ், கூட்டணி ஆட்சியின் போது இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்காமல், தற்போது அக்கறை இருப்பது போன்று தி.மு.க. அரசாங்கம் இரட்டை வேடம் போடுவதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“இந்தியாவுக்கு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்தில் முழுமையாக, கடந்த காங்கிரஸ் மற்றும் தி.மு.க. கூட்டணி ஆட்சியின் தவறுகளை வெளிப்படுத்தும் ஒப்புதல் வாக்குமூலமாக உள்ளது.

06

# போலி ரூ.5,000 நாணயத்தாளுடன் மூன்று இளைஞர்கள் கைது

இராஜாங்கனையில் சம்பவம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

போலி 5,000 ரூபா நாணயத்தாள் வைத்திருந்த சந்தேக நபர்கள் மூவரை இராஜாங்கனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (20) இராஜாங்கனை பொலிஸ் பிரிவினர், இராஜாங்கனை சந்திப்பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் மூவரை கைது செய்துள்ளதுடன், போலி 5,000 ரூபா நாணயத்தாளொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இராஜாங்கனையை வசிப்பிடமாக கொண்ட 18, 23, 26 வயதுடையவர்கள் என்பது ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

கைதானவர்களில் இருவர், போலி நாணயத்தாள்களை அச்சிட்டு வழங்கியவர்கள் என்பது பொலிஸார் நடத்திய மேலதிக விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளும் இராஜாங்கனை பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு துறைமுகத்தில் ஜப்பான் போர்க்கப்பல்

195 பேர் பணியாற்றும் கப்பல், 151 மீற். நீளமானது

ஜப்பான் கடல்சார் தற்காப்பு படையணிக்குச் சொந்தமான (Japan Maritime SelfDefense Force) ‘SAMIDARE (DD106)’ என்றழைக்கப்படும் போர்க்கப்பல் நேற்று முன்தினம் (20) உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக, இலங்கை கடற்படை தெரிவித்தது.

இந்த ஜப்பானியக் கப்பலை கடற்படையினர் கடற்படை மரபுகளின்படி வரவேற்றனர். 151 மீற்றர் நீளமுள்ள இந்த போர்க்கப்பலில் 195 பேர் பணியாற்றுகின்றனர். இந்தக் கப்பல் இம்மாதம் 29ஆம் திகதியன்று நாட்டிலிருந்து புறப்படத் திட்டமிட்டுள்ளது.



இந்த விஜயத்தில் ‘SAMIDARE (DD106)’ கப்பலின் கட்டளை அதிகாரி, தளபதி OKUMURA Kenji மற்றும் Flag Officer, ரியர் அட்மிரல் NISHIYAMA Takahiro ஆகியோர் வந்துள்ளனர்.

இந்தக் கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில்,

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.42 | 214.02 |
| கனடியன் டொலர் | 226.74 | 240.83 |
| யூரோ | 331.60 | 350.03 |
| ஜப்பான் யென் | 2.1241 | 2.2376 |
| சிங்கப்பூர் டொலர் | 224.04 | 237.14 |
| ஸ்டேர்லிங் பவுன் | 388.30 | 408.92 |
| சுவிஸ் பிராங்க் | 338.21 | 360.12 |
| அமெரிக்க டொலர் | 304.02 | 318.23 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 826.29 | கட்டார் ரியால் | 85.48 |
| குவைத் டினார் | 1015.01 | சவூதி ரியால் | 83.03 |
| ஓமான் ரியால் | 809.14 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.81 |

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 06ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 03



**குறள் தரும் சிந்தனை**

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது

நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ்கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை, மேலும் வளர்த்துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்வதே நல்லது.

# ஜனாதிபதியின் இந்திய விஜயம் புதிய அத்தியாயத்தின் ஆரம்பம்

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணமாகியுள்ளார். இந்த விஜயத்தின் போது இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் பாதுகாப்பு ஆலோசகர் அஜிட் டோவல் உட்பட பலரையும் சந்தித்து அவர் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான இவ்விஜயம் அதிக முக்கியத்துவம் அளித்து நோக்கப்படும் சூழலில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்பதவியைப் பெற்ற பின்னர் இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ள முதலாவது விஜயமே இதுவாகும். அதுவும் ஜனாதிபதி பதவியை ஏற்று சரியாக ஒரு வருடம் நிறைவடையும் காலப்பகுதியில் தான் இந்தியாவுக்கான இராஜதந்திர விஜயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் கிடையில் இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு 75 வருடங்கள் நிறைவடைவதையொட்டி இந்தியப் பிரதமர் விடுத்த அழைப்பை ஏற்றே ஜனாதிபதி இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப் பதவியை ஏற்கும் போது நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிர நிலையை அடைந்திருந்தது. நாடு வங்குரோத்து நிலைக்கு உள்ளாகி இருந்தது. நாட்டில் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் இடம்பெற்றவண்ணமிருந்தன. சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதிலும் பலவீனங்கள் ஏற்பட்டிருந்தன.

இவ்வாறான இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்து பொருளாதார மேம்பாட்டுக்கு திட்டங்களை ஆரம்பித்தார். அதேநேரம் நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும், பாதிப்புகளும் மக்களுக்கு சுமையாகவும் அழுத்தமாகவும் அமைவதை தவிர்ப்பதற்கு தன்னாலான உதவி, ஒத்துழைப்புகளை ஆரம்பம் முதல் இந்தியா வழங்கி வந்தது. ஜனாதிபதி பதவி ஏற்ற பின்னரும் இந்த உதவி ஒத்துழைப்புகள் தொடர்ந்தன.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி ஆரம்பித்த வேலைத் திட்டங்களுக்கு இந்தியாவின் உதவியும், ஒத்துழைப்புகளும் பக்கபலமாக அமைந்திருந்தன. இதன் பயனாக ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் ஊடாக நாடு கட்டம்கட்டமாக மீட்சி பெற்று வந்த நிலையில், தற்போது மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து இருக்கிறது.

இவ்வாறான சூழலில் பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி இந்தியாவுக்கு மேற்கொண்டிருக்கும் விஜயம், பாரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. பொருளாதார நெருக்கடி காலத்தில் இந்தியா அளித்த உதவி ஒத்துழைப்புகள் இலங்கையின் மீட்சிக்கு பக்கபலமாக அமைந்திருந்தது போன்று ஜனாதிபதியின் இவ்விஜயம் இந்நாட்டின் மறுமலர்ச்சிப் பாதையில் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கும் என்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகவும் உள்ளது.

அந்த வகையில் இந்தியப் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவில் புதிய அத்தியாயத்தை நிச்சயம் ஆரம்பித்து வைக்கும் சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளன. இப்பேச்சுவார்த்தையின் போது பொருளாதார ரீதியில் இலங்கையைக் கட்டியெழுப்புவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கையின் வலுசக்தி மையமாகவும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட ஏனைய பொருளாதார நடவடிக்கைகளின் மத்திய நிலையமாகவும் இந்தியாவின் ஒத்துழைப்போடு திருகோணமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்தோடு தலைமன்னார் இராமேஸ்வரம் மற்றும் நாகப்பட்டினம் – காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களுக்கு இடையில் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் கருத்துகள் பரிமாறப்பட்டுள்ளன. இவற்றை விடவும் ஏனைய சமூக, பொருளாதார, உட்கட்டமைப்பு துறைகளின் மேம்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கையின் மேம்பாட்டுக்கு பங்களிக்கக் கூடிய பல்வேறு விடயங்கள் குறித்தும் ஜனாதிபதியின் இவ்விஜயத்தின் போது கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயம் இலங்கையின் பொருளாதார, மறுமலர்ச்சியில் புதிய அத்தியாயத்தை திறந்து வைக்கும். அதுவே மக்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# உலகின் அதிக வெப்பம் நிலவும் மாதம் இது; எதிர்காலத்தில் உஷ்ணம் மேலும் அதிகரிக்கும்!





## நாசா விஞ்ஞானி எச்சரிக்கிறார்



இந்த வருடம் ஜூலை மாதம்தான் நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் உலகின் மிக அதிக வெப்பமான மாதமாக இருக்கும் என்று நாசாவின் முக்கியமான காலநிலை நிபுணர் கவின் ஷ்மிட் தெரிவித்துள்ளார். மேலும் ஒரு எச்சரிக்கைத் தகவலையும் கொடுத்துள்ளார் அவர்.

உலகின் பெரும்பாலான பகுதிகளில் எல்நினோ தாக்கத்தால் வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த நிலையில் உலகில் அதிக வெப்பம் பதிவான மாதமாக இந்த ஜூலை மாதம்தான் இருக்கும் என நாசா காலநிலை விஞ்ஞானி கவின் ஷ்மிட் தெரிவித்துள்ளார். மேலும், 2024ஆம் ஆண்டு இதைவிட உச்சங்களை எட்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

உலகின் சராசரி வெப்பநிலையை 16 பாகை செல்சியஸ் என்ற அளவுக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்று சுற்றுச்சூழல் வல்லுனர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், கடந்த ஜூலை 3 ஆம் திகதி உலகின் சராசரி வெப்பநிலை 17.01 பாகை செல்சியஸ் என்ற அளவுக்கு அதிகரித்தது. அந்த நாள் உலகின் மிக அதிக வெப்பம் தகித்த நாளாக பதிவானது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் உலகின் சராசரி வெப்பநிலை 16.92 பாகை செல்சியஸ் என்ற அளவில் பதிவாகியிருந்தது. அதுதான் உலகின் மிக அதிக வெப்பநிலையாக பதிவு செய்யப்பட்டு இருந்தது. அதை மிஞ்சும் வகையில் ஜூலை 3ஆம் திகதி 17.01 பாகை செல்சியஸ் சராசரி வெப்பநிலை பதிவானது. தொடர்ந்து ஜூலை 4 ஆம் திகதி 17.18 பாகை செல்சியஸ் ஆக பதிவானது. அடுத்து ஜூலை 6 ஆம் திகதி 17.23 பாகை செல்சியஸ் ஆக வெப்பநிலை பதிவானது. இப்படி ஜூலை மாதத்தில் உலகின் வெப்பநிலை புதிய உச்சங்களை எட்டியது.

இந்த ஆண்டு கோடைகாலம் தொடங்கியது முதலே வெயில் கடுமையாக வாட்டி வதைத்தது. கடுமையான வெப்பத்தால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த ஆண்டில் வரலாறு காணாத அளவு வெப்பநிலை அதிகரித்துள்ளதாக நாசா தகவல் வெளியிட்டுள்ளது.

நாசாவின் வாஷிங்டன் தலைமையகத்தில் நாசா நிர்வாகி பில் நெல்சன் மற்றும் தலைமை விஞ்ஞானயும் மூத்த காலநிலை ஆலோசகருமான கேட் கால்வின் உள்ளிட்ட காலநிலை நிபுணர்கள் மற்றும் பிற தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் மூத்த காலநிலை விஞ்ஞானி கவின் ஷ்மிட் இது குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

எல் நினோ ஒரு சிறிய பங்கு வகித்தாலும், நாம் பார்ப்பது ஒட்டுமொத்த வெப்பத்தையே, எல்லா இடங்களிலும், குறிப்பாக கடல்களின் வெப்பம் வெகுவாக அதிகரித்துள்ளது. பல மாதங்களாக, வெப்பமண்டலத்திற்கு வெளியேயும் கூட, கடல் மேற்பரப்பு வெப்பநிலை முந்திய பதிவுகளை முறியடித்து வருகிறது என கவின் ஷ்மிட் தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதம்தான் மிக அதிக வெப்பமான மாதமாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன எனத் தெரிவித்துள்ள ஷ்மிட், தற்போது தனது கணக்கீடுகளின் அடிப்படையில் இதற்கு 5050 வாய்ப்புள்ளதாக கூறியுள்ளார். மற்ற காலநிலை விஞ்ஞானிகள் இதற்கு 80 சதவீதம் வரை வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளனர். 2024 ஆம் ஆண்டு 2023 ஐ விட அதிக வெப்பமாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர். ஏனெனில் எல்நினோ வானிலை முறை உலகளாவிய வெப்பநிலையை அதிகரிக்கும் போக்குக்கு பெயர் பெற்றது. இந்த ஆண்டின் இறுதியில் வெப்பநிலை உச்சத்தை எட்டும் என்றும் ஷ்மிட் தெரிவித்துள்ளார்.

# கம்பிரிகஸ்வெவ மனாறுல் உலூம் ம.வியில் மூன்று பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை

அனுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட கம்பிரிகஸ்வெவ மனாறுல் உலூம் மகாவித்தியாலயத்தில் பிரதான மூன்று பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக வித்தியாலய அதிபர், மாணவர்கள் மற்றும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்மையினால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாடசாலையை சூழ அசறிக்கம, அழுத்கம, கம்பிரிகஸ்வெவ, கியுளேகட இஹலகொட்டியாவ கோவில்பந்தாவ, புதுக்குளம், பஹிவலயாகம, ஹெலம்பகஸ்வெவ, மஹாசியம்பலாகஸ்வெவ, பழுகஸ்வெவ மற்றும் இஹலகஹகொல்லாவ கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகள் தரம் 06 தொடக்கம் க.பொ. த உயர்தரம் வரை இப்பாடசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது .குறித்த பிரதேசதில் விவசாயத்தையே வாழ்வாதாரமாக நம்பி வாழ்ந்து வரும் மக்கள் அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து கற்றல் நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்திவருகின்றனர். இருந்த போதும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் க. பொ. த சாதாரண தரம் மற்றும் க.பொ. த உயர்தரத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்று வரும் நிலையில், 2023 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகின்றது.

குறித்த மூன்று பாடங்களுக்கும் ஆரியர்களை பெற்றுக்கொள்வதில் அதிபர் கடும் பிராயத்தனம் மேற்கொண்ட போதும் அது பயனளிக்கவில்லை எனவும் தெரியவருகிறது. கல்வியல் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவு செய்தோருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட வேளையில், இப்பாடசாலைக்கும் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் கிடைத்துள்ள போதும் இந்தச் செய்தி (28) அச்சுக்கு போகும் வரைக்கும் எந்தவொரு புதிய ஆசிரியரும் கடமைக்கு சமுகமளிக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இந்நியமனத்தின் பின்னர் மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் அபிவிருத்தி அதிகாரியை பெற்றோர்தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட போதும் பலனளிக்கவில்லை.

**மதார் தம்பி ஆரிப்...**
*(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)*

# அமரர்கள் மகாலிங்கசிவம் தம்பதியர் ஞாபகார்த்த கிரிக்கட் சுற்றுப் போட்டி

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய அமரர்களான திரு, திருமதி மகாலிங்கசிவம் ஞாபகார்த்த T10 கடினபந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் சம்மாந்துறை அணி வெற்றி வாகை சூடி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இச்சுற்றுப் போட்டியில் 32 கழகங்கள் விலகல் முறையில் கடந்த இரண்டு மாதங்களாக காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் பங்குபற்றி வந்தன. இறுதிப் போட்டிக்கு சம்மாந்துறை அணியும் சாய்ந்தமருது பிளாஸ்ரர் அணியும் மோதின.

இந்த மாபெரும் இறுதிப்போட்டியானது கழகத் தலைவர் தம்பிராசா தவக்குமார் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாக நடந்தேறியது. இறுதிப் போட்டியில் பிரதம அதிதியாக மகாலிங்கசிவம் அசோக் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக கழகப் போசகர்களாகிய வி. இராஜேந்திரன், வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்த மாபெரும் இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது Blaster அணியை எதிர்த்து சம்மாந்துறை SSC அணி மோதியிருந்தது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற SSC அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அதனடிப்படையில் 10 ஓவர்கள் முடிவில் SSC ச சமய பஅணியானது 109 ஓட்டங்களைப் பெற்றது. 110 என்ற சவால் மிக்க இலக்கினை அடையும் நோக்கில் களமிறங்கிய Blaster அணி 10 ஓவர்கள் முடிவில் 84 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனடிப்படையில் SSC அணியானது 26 ஓட்டங்களினால் வெற்றிவாகை சூடியது.



## காரைதீவில் நடைபெற்ற போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த சம்மாந்துறை அணி!





முதல் பரிசாக 30ஆயிரம் ரூபாவும் பாரிய வெற்றிக் கிண்ணமும் றண்ணஸ் அப் இரண்டாம் பரிசாக 20 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும் அதிதிகளால் வழங்கி வைக்கப் பட்டன. ஏனைய பவர்பிளே கௌரவ அணி மற்றும் சிறப்பு வீரர்களுக்கும் நடுவர்களுக்கும் பணப்பரிசும் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. கழகச் செயலாளர் எஸ்.கிருஷாந்த் நன்றி உரையாற்றினார்.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷன், புத்தகக் கழகம் இணைந்து நடத்திய கட்டுரைப் போட்டிக்கான விருது விழா

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷன் மற்றும்(The Book Club) புத்தகக் கழகமும் இணைந்து கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மற்றும் அரபுக்கல்லூரி மாணவர்களின் எழுத்தாற்றலை விருத்திசெய்யும் நோக்கில் நடத்திய கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கான விருது விழா மருதமுனை பொதுநூலக கேட்போர் கூடத்தில் பவுண்டேசனின் இணைப்பாளர் சட்டத்தரணி எம்.இஸட்.எம் ருடானி, புத்தகக் கழகத்தின் பொறுப்பாளர் ஏ.ஜே.ஆகாஸ் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

மர்ஹூம் எம்.எம்.முஸ்தபா அதிபர் நினைவரங்கில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரிவு 1, பிரிவு2, பிரிவு3களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே தங்கம் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஒவ்வொரு பிரிவிலும் தலா பத்து மாணவர்களுக்கு ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





பவுண்டேஷனின் தலைவரும் கல்முனை குவாசி நீதிமன்ற நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எப்.எம்.அன்சார் மௌலானா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், விஷேட அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் மற்றும் சிலோனிக்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இர்பான் பன்னாஹ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் நிகழ்ச்சிகள் பிரிவின் சிரேஷ்ட நிகழ்ச்சித் தயாரிப்பாளராக 28 ஆண்டுகள் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற ஊடகவியலாளர் மபாஹிர் மசூர் மௌலானாவுக்கு மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் பழீல் மௌலானா பவுண்டேஷனின் தவிசாளருமாகிய அஷ்ஷெய்க் அஹமத் அன்சார் மௌலானா(நளீமி) பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அத்துடன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் விருது வழங்கி கௌரவித்தார்.

எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர் சிராஜ் மசூர் 'வாசிப்பு கலாசாரமும் புதிய மாணவர் சமூகமும்' எனும் தலைப்பில் நிகழ்வின் நோக்கவுரையை நிகழ்த்தினார். நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளும் நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷனின் செயலாளரும்,சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எம்.எம்.ஜமால்டீன் நிகழ்வை நெறிப்படுத்தினார். அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ரீ.எம். சதாம் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# பலஸ்தீன மண்ணில் இடம்பெறுகின்ற கொடூரங்கள் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்!

## பாராளுமன்றத்தில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி உரை



மனித வரலாற்றில் மிகவும் துன்பகரமான சூழ்நிலையை நாம் இன்று மத்திய கிழக்கு பிராந்தியத்தில் காண்கிறோம். அது துன்பகரமானது. ஏழு தசாப்தங்களுக்கும் அதிக காலப்பகுதியில் இடம்பெறும் இந்த கொடூரமான வன்செயல்களை அதே நிலையில் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இடமளிப்பது எந்தவொரு மனிதரதும் மனசாட்சிக்கு ஏற்புடையதொரு விடயமல்ல.

இந்த நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருப்பதாக நான் கருதவில்லை. இந்தப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாணும் வகையில் சுயாதீனமான இரு தேசங்களை உருவாக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு எடுத்த தீர்மானமானத்துக்கு வரலாறு முழுவதும் இலங்கை பாராளுமன்றத்தின் அனைத்து கட்சிகளினதும் ஏகமனதான பூரண ஒத்தாசை கிடைக்கப் பெற்றுள்ளது.

பலஸ்தீன் மக்களின் சுயாதீனம், சுயஅபிலாசைகள், சுதந்திர உரிமைகள் தொடர்பான திடமான நிலைப்பாட்டைக் கொண்ட இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை அலங்கரித்த அபிமானத்தைப் பெற்ற இரு தலைவர்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது எனது கடமையென நான் கருதுகின்றேன்.

அவர்கள், பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்களுமாவர். உண்மைக்கு முன்னிற்பதில் எந்தவொரு சலுகைகளையும் எதிர்பார்த்தோ அல்லது பயமுறுத்தல்களுக்கோ, அல்லது அச்சுறுத்தல்களுக்கோ இந்த தலைவர்கள் தலைசாய்க்கவில்லை.

50 ஆம் தசாப்தத்தின் ஆரம்பத்தில் சீனாவுடனான இறப்பர்_ அரிசி உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடும் சந்தர்ப்பம் அதில் ஒன்றாகும். சீனாவுடன் உறவை வைத்திருந்தால் மேற்கத்தேய உதவிகள் நிறுத்தப்படும் என்ற வலுவான அழுத்தங்கள் வந்தாலும் அந்த அழுத்தங்களுக்கு தலைசாய்க்காது அப்போதைய பிரமதர் டட்லி சேனாநாயக்க அவர்கள் குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திட தீர்மானித்தமை இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு ஞாபகத்தில் வருகிறது. அதேபோல, பிரான்ஸிஸ்கோ மாநாட்டில் ஜே. ஆர். ஜயவர்தன அவர்கள் ஆற்றிய உரை எனது நினைவில் வருகிறது. இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பான் செய்த அனர்தங்களுக்கு நஷ்டஈடு பெறப்பட வேண்டும் என்ற வல்லரச நாடுகளின் நிலைப்பாட்டுக்கு மாறாக அன்று இலங்கை அந்த மாநாட்டில் 'பகைமையை பகைமையால் தீர்க்க முடியாது' என்ற தம்ம பதத்தை மேற்கோள்காட்டி வீழ்ந்து கிடக்கும் நாட்டிடமிருந்து இழப்பீடு பெறுவதைக் காட்டிலும் அந்த நாட்டுக்கு எழுந்திருக்க உதவி செய்வதே செய்யப்பட வேண்டியது எனக் கூறியது.

வெளிவிவகார விடயங்கள் தொடர்பான எமது முன்னைய தலைவர்களது இவ்வாறான முன்னெடுப்புக்களும் தீர்மானங்களும் இன்றும் எமக்கு வழி காட்டுகிறன.

இன்று இந்த சபையின் முன்னால், நான் முன் வைத்துள்ள இந்த முன்மொழிவானது ஜனநாயகம் தொடர்பான ஒரு பிரச்சினை. இது மனிதத்துவ பெறுமானம் தொடர்பான ஒரு பிரச்சினை. இது சமூக அநீதி தொடர்பான ஒரு பிரச்சினை. இது பலவந்தமாக நாடுகளை கைப்பற்றல் தொடர்பான ஒரு பிரச்சினை. இது ஆக்கிமிப்பு தொடர்பான ஒரு பிரச்சினை. இது புதிய காலனித்துவ உபாயம் தொடர்பான ஒரு பிரச்சினை.

அதிகாரத்தின் மூலம் கைப்பற்றப்பட்டுள்ள பலஸ்தீன நிலப்பரப்பில் ஆரம்ப குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கும் அகதிகள் முகாம்களுக்கும் நாளாந்தம் இராணுவம் ஊடுருவி எந்தவித குற்றச்சாட்டுக்களும் இன்றி சிறு பிள்ளைகளையும் இளையோர்களையும், பெண்களையும் அச்சுறுத்தி அவர்களை கைதுசெய்கின்றது.

அதிகாரத்தின் மூலம் கைப்பற்றப்பட்டுள்ள நிலப்பரப்பை திறந்த சிறைச்சாலையாக மாற்றி நிலத்தாலும், வான்வழியாகவும் ஏவுகணை தாக்குதல் நடாத்தி முன்னெடுக்கும் மனிதப் படுகொலைகள், சொத்துக்கள் அழிப்பு மற்றும் காயப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்க இருக்கும் பாதைகளைக் கூட மறித்து மேற்கொள்ளப்படும் மனிதநேய மற்ற செயற்பாடாகும்.

இங்கு எனக்கு ஞாபகம் வருகிறது, இஸ்ரேலின் வேண்டுதலுக்கமைய ஜெரூஸலத்தை தலைநகராக அங்கீகரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தீர்மானித்தவேளை அதற்கு எதிராக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக 14 நாடுகள் வாக்களித்த நிலையிலும் அமெரிக்காவின் இரத்து (வீட்டோ) அதிகாரத்தினால் அது செயலற்றுப்போனது. அதேபோல, இந்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களிக்கும் நாடுகளுக்கான உதவிகள் நிறுத்தப்படும் என பகிரங்கமாகவே எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

வல்லரசு நாடுகளின் இவ்வாறான நடத்தை சிறிய நாடுகளின் நலன் பாதுகாப்புக்கான பல்தரப்பு கட்டமைப்பு பலவீனப்படுத்தப்படுவதுடன் இதனூடாக வழங்கப்படும் செய்தி யாதெனில் ஏனைய நாடுகளும் இஸ்ரேல் போன்று அதிகாரமிக்க ஒரு நாட்டின் ஆசிர்வாதத்துடன் தாமும் சர்வதேச சட்டங்களை பேணாமல் செயற்பட எத்தனிக்க முடியும் என்பதாகும். பலஸ்தீன் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொடூரமான வன்செயல்கள் தொடர்பான மனதை உறுத்தும் உதாரணங்கள் ஏராளம்.

இஸ்ரேலும் பலஸ்தீனும் இரு சுதந்திர தேசங்கள் என்பதை யதார்த்தமாக்கி அந்த தேசங்களில் வாழும் யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் அகிய அனைவரும் சமத்துவமாகவும் நியாயமாகவும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒருவரை ஒருவர் மதித்து, வேறுபாடு காட்டாமல், வாழும் நாளைய தினம் உருவாக வேண்டும். இந்த நீதியையும் நியாயத்தையும்இந்த மசோதா ஊடாக இலங்கைப் பாராளுமனறம் இன்று உணர்த்தி நிற்கின்றது.

பலஸ்தீன் மண்ணில் வன்முறையை விதைத்தல், அபகரிக்கப்பட்ட நிலப்பரப்பில் தொடரும் பலவந்தமான விஸ்தரிப்பு, மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக அந்த இடத்துக்குச் சென்று தேடிப்பார்த்து விசாரணை செய்வதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுத்துள்ள வேண்டுதலை இஸ்ரேலின் பொறுப்புதாரிகள் கணக்கிலும் எடுக்காமல் இருப்பதை உலகம் அவதானித்துக் கொண்டுள்ளது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கைகளைத் தேடிப்பார்த்து விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச நீதிமன்றத்துக்கும் அனுமதி மறுக்கும் இதுபோன்ற தன்னிச்சையான கொள்கைளும் காணக்கிடைக்கின்றன.

அன்று மேற்கற்தேய நாடுகளின் அதிகாரத்தைப் பிரயோகித்து பலஸ்தீனத்தின் உண்மையான உரிமையாளர்களின் எதிர்ப்பைக் கூட கவனத்திலெடுக்காது இஸ்ரேல் நாட்டை உருவாக்கும் வேளை சுயாதீனமான இரு நாடுகளை உருவாக்கும் முன்மொழிவும் ஒப்புதலும் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், இன்று சுயாதீன பலஸ்தீன் நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் பெரும்பகுதி பலவந்தமாக அபகரிக்கப்பட்டுள்ளதுடன் அதிலும் திருப்பதியடையாது இஸ்ரேல் நிலஆக்கிரமிப்பில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகிறது. இதற்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவது ஒருபுறமிருக்க அவை தொடர்பான எவ்விதமான முன்னனெடுப்புக்களுக்கும் தடங்களாக இருப்பது ஜனநாயக அடிப்படைகளுக்கான அவமரியாதையென என நாம் கருதுகிறோம்.

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு இந்தியாவுடனான நல்லுறவு துணைபுரியும்!





## வர்த்தகத்தில் பங்காளிகளாகத் திகழ்வதன் மூலம், இராஜதந்திர உறவுகளும் வலுவடையும் வாய்ப்பு!

இலங்கையில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதாயின் எமது நாட்டை உலகுக்கு திறந்துவிட வேண்டியது அவசியம். அது தொடர்பான சட்டச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டாலேயே அது சாத்தியமாகும்.

இலங்கையின் பொருளாதார அபவிருத்தியைப் பொறுத்தவரை இந்தியாவுடனான பொருளாதார நல்லுறவு பிரதானமாகும். எமது அயல்தேசமான இந்தியா உலகின் வலுவான பொருளாதார பலம் கொண்ட நாடாக விளங்குகின்றது. உலகின் ஐந்தாவது பொருளாதார வல்லரசாக இந்தியா உள்ளது. இந்தியாவுடன் பொருளாதார நெருக்கத்தை மேலும் நெருக்கமாக்கிக் கொள்வதன் மூலம் இலங்கை தனது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

இலங்கையை அதிக போட்டித்தன்மை கொண்ட பொருளாதார முறைக்கு கொண்டு செல்ல வேண்டியது மிக அவசியம். அப்போதுதான் உலகுடன் போட்டியிட்டு பொருளாதார அபிவிருத்தியைக் காண முடியும். அதாவது பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஊடாக வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

இந்திய வர்த்தக சமூகத்துடன் இலங்கை தனது தொடர்பை நெருக்கமாக்கிக் கொள்வதன் ஊடாக எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி துரிதமடையுமென்பது நம்பிக்கையாகும். அரசாங்கத்தின் இன்றைய கொள்கையைப் பொறுத்தவரை பொருளாதார சுபீட்சத்திற்கான பாதையில் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றது.

இதனை சுருங்கக் கூறுவதாயின் இந்திய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்டு வரும் நிதிக்கொள்கையானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்ததொரு வழிகாட்டியாக அமையுமென்பதே உண்மை.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் சுமார் எழுநூறு வருடங்களுக்கு மேலாகத் தொடர்வதாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களும் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை பண்டைய காலத்தில் கொண்டிருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறியிருக்கின்றனர்.

தற்போது ஆசியப் பிராந்தியத்தில் பலம் வாய்ந்த நாடாக இந்தியா தனது அதிகாரத்தை நிலைநாட்டியுள்ளது.பொருளாதாரத்தில் மாத்திரமன்றி, இராணுவ வல்லமையிலும் இந்தியா உறுதியான நிலையில் உள்ளது. இந்தியா போன்ற பலம் வாய்ந்த நாட்டுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது இலங்கையின் பொருளாதாரத்துக்கு அதிக நன்மைகளை ஏற்படுத்துமென்பதில் ஐயமில்லை. பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட நிதிக் கொள்கை காரணமாக பொருளாதாரத்தில் இந்தியாவினால் முன்னேற முடிந்தது. அந்த நிதிக்கொள்கைகள் இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்துக்கும் உதவக்கூடியதாக இருக்குமென்பது இலங்கையின் இன்றைய நம்பிக்கையாகும்.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டுமாயின், இந்தியாவுடன் நெருங்கிய நல்லுறவை வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். இலங்கையின் பொருளாதார நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. இரு நாடுகளுக்குமிடையில் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் ஆராயப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் அதிகரிக்கப்படுவதன் மூலமே இருநாடுகளுக்கும் இடையே நட்புறவுப் பாலத்தை உருவாக்க முடியும். இலங்கை மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்பட்ட போதெல்லாம் விரைந்து வந்து உதவிக்கரம் நீட்டிய நாடு இந்தியா என்பதை ஒருபோதும் நாம் மறந்து விடலாகாது. தீவிரமான பொருளாதார நெருக்கடி நிலவிய வேளையில் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கு இந்திய அரசாங்கம் மாத்திரமன்றி வர்த்தக சமூகமும் உதவிகளை வழங்கியது நினைவிருக்கலாம்.

இலங்கை, தற்போது நிதி நெருக்கடியில் இருந்து வேகமாக மீண்டு வருகிறது. இலங்கையை பொருளாதார ரீதியாகவும், பௌதிக ரீதியாகவும் அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசாங்கத்தினதும் வர்த்தக சமூகத்தினரதும் ஆதரவு மிகவும் அவசியமானதாகும்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் அபிவிருத்தி, வடபகுதி புகையிரதப்பாதை அபிவிருத்தி மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தின் கட்டுமானம் போன்றவற்றுக்கு இந்தியா அதிக உதவிகளை வழங்கியிருந்தது. யாழ் கலாசார நிலையத்தை நிர்மாணிக்கவும் இந்தியா உதவியிருந்தது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பலம், செல்வாக்கு மிக்க நாடாக இந்தியா விளங்குகிறது. பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் உட்கட்டுமானம் உள்ளிட்ட பல துறைகளில் இந்தியாவின் பலம் இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் சக்தி மிக்கதாகவே விளங்குகிறது. பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் எல்லைப் பிரச்சினை காணப்பட்டாலும், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சிறப்பு வாய்ந்தது.


அத்துடன் மதம், கலாசாரம், பண்பாடு என பல்வேறு விடயங்களில் இருநாடுகளுக்கும் இடையில் நீண்டகாலத் தொடர்பு நிலவி வருகின்றது. இலங்கையின் 'பிக் பிரதர்' எனக் கருதப்படும் இந்தியாவானது இலங்கை மீது எல்லா சந்தர்ப்பங்களிலும் கரிசனை கொண்ட நாடாகவே இருந்து வருகின்றது. இறுதிக்கட்ட யுத்த காலத்தின் போதும், அதன் பின்னரான அபிவிருத்திக் கட்டத்தின் போதும் இந்தியா எப்பொழுதும் இலங்கையின் நண்பராகவே செயற்பட்டு வந்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அண்மைக் கால முன்னேற்றங்களின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது இலங்கை மீது இந்தியாவின் கரிசனை தற்போது முன்னரைவிடவும் அதிகரித்திருப்பதாகவே தெரிகிறது. அதுவும் வடக்கு, கிழக்கு மீதான கரிசனை புதிதாக உருவாகியுள்ளதையே நிகழ்வுப் போக்குகள் புலப்படுத்துகின்றன.

பூகோள அமைவிடம் காரணமாக இலங்கை மீது பல்வேறு உலக நாடுகள் அக்கறை கொண்டிருக்கும் நிலையில், அயல்நாடான இந்தியாவின் அக்கறை இரு நாட்டுக்கும் இராஜதந்திர ரீதியிலான நன்மைகளை ஏற்படுத்தித் தரும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

**எஸ். சாரங்கன்...**

# 'ஆசியான்' வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு: பொருளியலில் ஒருங்கிணைவதற்கு முடிவு!




இந்தோனேசியாவில் நடைபெற்ற மாநாட்டில் மியன்மார் அரசியல் சர்ச்சை, தென்சீனக் கடல் விவகாரம் பேசப்பட்டது. அத்துடன் கொரோனா பரவலில் இருந்து மீண்டது குறித்தும் பொருளியல் ஒருங்கிணைப்பு குறித்தும் ஆராயப்பட்டது. ஆசியான் அமைச்சர்களின் சந்திப்பில் கிழக்கு திமோர் கலந்து கொள்வது இதுவே முதல்முறையாகும்.

இந்தோனேசியாவில் கடந்த வாரம் நடந்த ஆசியானின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் சீனா, ரஷ்யா, அமெரிக்கா ஆகியவற்றின் வெளியுறவு அமைச்சர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் ஜூலை 12 இல் தொடங்கிய பல்வேறு கூட்டங்களில் இந்த வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள்.

குறிப்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளிங்கன், சீன வெளியுறவு அமைச்சர் சின் காங், ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரோவ் ஆகிய அனைவரும் ஜகார்த்தாவுக்கு வந்தார்கள்.

இந்தோனேசியாவில் நடைபெற்ற மாநாட்டில் ஆசிய வெளியுறவு மற்றும், உலக விவகாரங்களைக் கலந்து ஆலோசித்தனர்.

தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (Association of Southeast Asian Nations) ஆசியான் (ASEAN)என்பது தென்கிழக்காசியாவின் 10 நாடுகளின் பொருளாதார, மற்றும் புவியியல் சார்ந்த அரசியல் கூட்டமைப்பு ஆகும். இதனை ஓகஸ்ட் 8, 1967 இல் இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து அமைத்தன.

ஆசியான் அமைப்பானது மொத்த உலகின் பரப்பளவின் 3% ஆகும். இப்பிராந்தியத்தின் மக்கள் தொகை சுமார் 600 மில்லியனாக உள்ளது. இது மொத்த உலகின் மக்கள் தொகையின் 8.8% ஆகும். 2011 ஆம் ஆண்டு இவ்வமைப்பின் ஒருங்கிணைந்த மொத்தத் தேசிய உற்பத்தியானது 2 ட்ரில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக வளர்ச்சியடைந்தது. ஆசியான் அமைப்பை தனி அமைப்பாகக் கருதினால், இது உலகின் எட்டாவது மிகப்பெரிய பொருளாதார அமைப்பாகக் காணப்படும்.





### இந்தோனேசிய மாநாடு:

பிராந்திய அமைதியையும், அமைதி நிலைத்தன்மையையும் நிலைநாட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கவேண்டும். அதற்கு ஆசியான் நாடுகளின் ஒற்றுமை வலுப்பெறுவது முக்கியம் என இந்தோனேசியா மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

ஆசியானின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில், ஆசியானின் சமூகத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளை மறுஆய்வு செய்வதுடன், மாறிவரும் பிராந்திய சூழ்நிலையில் ஆசியானின் ஒற்றுமையையும் மறுவுறுதிப்படுத்தும் என்று கூறப்பட்டது.

ஆசியானின் பொருளியல் ஒருங்கிணைப்பு பற்றியும் இந்தோனேசியாவின் தலைமைத்துவத்தின் கீழ் நீண்டகால வளர்ச்சியையும் மேம்பாட்டையும் உறுதிசெய்யும் ஆசியானின் அடிப்படை நோக்கத்தைப் பலப்படுத்தவும் அமைச்சர்கள் விவாதித்தனர்.

இந்தக் கூட்டங்களில் 29 நாடுகளின் ஆசியான் செயலகம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிலிருந்து 1,165 பேராளர்களும் கலந்து கொண்டனர்.

ஆசியான் பிரகடனத்தின்படி ஆசியான் கூட்டமைப்பானது, கூட்டு முயற்சிகளின் மூலம் தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்தலும் சமூக கலாசார மேம்பாட்டை ஏற்படுத்துதல் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கங்களாகும்.

நீதிக்கும் சட்டத்திற்கும் மதிப்பளிப்பதன் மூலமும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் பிராந்தியத்தில் சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துதல். தீவிர ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியின் மூலம் பொருளாதார, சமூக, கலாசார, தொழில்நுட்ப, அறிவியல் மற்றும் நிர்வாகத் துறைகளில் வளர்ச்சியை ஏற்படுத்துதல். கல்வி, தொழில், தொழில்நுட்ப, மற்றும் நிர்வாகத் துறைகளில், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை ஏற்படுத்தி ஏனைய நாடுகளுக்கு உதவுதல்.

அவர்களின் விவசாயம் மற்றும் கைத்தொழிற் பயன்பாடு, வர்த்தகத்தினை விரிவாக்குதல், போக்குவரத்து வசதியை மேம்படுத்துதல், தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்துதல் என்பவற்றில் கூடிய கவனமெடுத்தல்.தென்கிழக்கு ஆசிய கற்கைநெறிகளை மேம்படுத்துதல். சமமான நோக்கங்களைக் கொண்ட சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களுடன் நெருக்கமான நன்மைமிக்க உறவுகளை ஏற்படுத்துதல் ஆகியன ஆசியான் அமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கங்களாகும்.

உக்ரேன் போர் இன்னமும் தொடர்வதால், அது கொவிட்19 பெருந்தொற்று காலத்துக்குப் பிந்திய மீட்சிக்கு பெரும் இடையூறாக உள்ளது. அது குறித்து அனைத்துலக அளவில் நடைபெறும் எல்லா கருத்தரங்குகளிலும் கூட்டங்களிலும் பேசப்படுகின்றன என்றும் இந்தோனேசிய வெளியுறவு அமைச்சர் ரெட்னோ மர்சுடி ஆசியானின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் கூறினார்.

ஆசியானின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்துக்குப் பிறகு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இம்முறை ஆசியானின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்துக்கு கிழக்கு திமோர் முதல் முறையாகப் பங்கேற்றது. கடந்த ஆண்டு அதற்கு ஆசியான் பார்வையாளர்கள் அந்தஸ்து அளிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொருளியல் ஒத்துழைப்பு பற்றிய பேச்சுகள், பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்களுக்கு ஆசியானின் ஒருங்கிணைந்த பதில்கள் இந்தக் கூட்டங்களில் மீண்டும் முக்கிய அம்சமாக விளங்கியது. மியன்மாரில் நிலவும் சூழ்நிலை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாண்டு மே மாதம் 10, 11ஆம் திகதிகளில் இந்தோனேசியாவின் லாபுவான் நகரில் நடைபெற்ற 42 ஆவது ஆசியான் உச்சநிலைக் கூட்டத்தில் ஆசியான் தலைவர்கள், கூட்டாக மியன்மாரின் அமைதித் திட்டம் குறித்து வலியுறுத்தியமை அறிந்ததே.

### தென்கிழக்காசியாவின் இந்தியா:

தென்கிழக்காசியாவின் வளர்ச்சியில் இந்தியா தொடர்ந்து முக்கிய பங்கு வகித்து வரும் நிலையில் ஆசியானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர வேண்டும். ஆசியான் பங்கு வகிக்கும் அனைத்து முக்கியக் கருத்தரங்குகளிலும் இந்தியாவும் உறுப்புரிமை பெற்றுள்ளது.

தென்கிழக்காசிய வட்டாரத்தின் தொடர் வளர்ச்சிக்கும் நிலைத்தன்மைக்கும் இந்தியா முக்கிய அம்சமாகத் திகழ்கிறது. தற்போது புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மை தொடரும் நிலையில் இந்தியாவின் பங்கு மேலும் முக்கியமானதாகிறது. ஆசியான்இந்தியா உறவுகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பை தற்போது சிங்கப்பூர் ஏற்றுள்ளது என்று ஆசியான் வெளியுறவு அமைச்சர்களுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் கலந்துகொண்ட சந்திப்பில் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் டொக்டர் விவியன் பாலகிருஷ்ணன் கூறியமை குறிப்பிடத்தக்கது.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

## நுண்கடன் நிதி திட்டங்களால்... 03ஆம் பக்கத் தொடர்

உண்டு. ஆனால், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இனியும் எடுக்கப் போவதில்லை. என்றார்.

## மாகாணசபை தேர்தல்,... 03ஆம் பக்கத் தொடர்

"இலங்கையில் துன்புற்று வாழும் தமிழ் மக்கள் தொடர்பாக இந்திய அரசாங்கத்துக்கு எப்போதும் தார்மீக கடப்பாடு உண்டு. 1964இன் சிறிமாசாஸ்திரி ஒப்பந்தம், 1987இன் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் சட்ட பொறுப்பும் உண்டு. அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை நாம் மீண்டும் மீண்டும் கூறுகிறோம். புதிதாக ஒன்றும் சொல்லவில்லை" எனத் தெரிவித்தார்.

## எதிரணி எம்.பி.க்களை... 03ஆம் பக்கத் தொடர்

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, எதிரணியில் சுயாதீனமாக செயற்படும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களை பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் இணைத்துக்கொள்ள எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாம் தெரிவித்தோம். ஆனால், இதுவரை எவரும் இணைத்துக்கொள்ளப்படவில்லை. அதற்கிணங்க, எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் அந்தக் குழுவில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுககொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த சபாநாயகர்,பா ராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் 16 பேரேஅங்கம் வகிக்க வேண்டும். ஆனால், தற்போது 33 பேர் அங்கம் வகிக்கின்றார்கள்.

இதன்போது அது தொடர்பாக மேலும் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், அந்தக் குழுவில் இடம்பெறும் 33 உறுப்பினர்களும் குழு கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை.

ஆகவே, கூட்டத்துக்கு சமுகமளிக்காதவர்களை நீக்கிவிட்டு எதிரணியில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளுங்கள் என கேட்டுக்கொண்டார்.

## குருந்தூர் அசோக விகாரை... 03ஆம் பக்கத் தொடர்

இந்த அறிவித்தல் எப்போது வெளியிடப்படுமென்று அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், தற்போதுவரை இந்த விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திலும் நீதவான் நீதிமன்றத்திலும் இரண்டு வழக்குகள் நடைபெறுவதாக தெரிவித்தார்.

எனவே, சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு, அவரின் யோசனையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும், அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு துறைமுகத்தில்... 03ஆம் பக்கத் தொடர்

இரு கடற்படைகளுக்கிடையே ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்தும் நோக்கில் இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்படும் பல நிகழ்ச்சிகளில் பணியாளர்கள் பங்கேற்கவுள்ளனர். கப்பல் புறப்படும் போது, கொழும்பிலிருந்து இலங்கை கடற்படைக் கப்பலுடன் புகைப்படக் காட்சியில் பங்கேற்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை தமிழர் விடயம்;... 03ஆம் பக்கத் தொடர்

இலங்கையில் யுத்தத்தின் மத்தியில் தமிழர்கள் இன்னல்களை எதிர்கொண்ட போது, இந்தியாவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் மத்திய அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்வதற்காக புதுடில்லிக்கு பறந்தவர்கள், ஏதோ கடிதங்களை எழுதியே பிரச்சினைகளை தீர்த்து விட்டதைப் போன்று இன்று பெருமை அடித்துக்கொண்டிருப்பது நகைப்புக்கிடமான விடயம்.

தி.மு.க. ஆட்சியில் கச்சதீவு தாரை வார்க்கப்பட்ட போது, பா.ஜ.க. தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். தமிழகத்தில் அன்று ஆட்சியிலிருந்த தி.மு.க. அரசாங்கம், வழக்குக்கு தேவையான ஆவணங்களைக் கூட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல், கச்சதீவு நம் கையை விட்டுச் செல்ல காரணமாக இருந்தது.

அதன் பின்னர், தி.மு.க. பலமுறை பல கட்சிகளுடன் சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்து மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகித்த போதும், கச்சதீவை மீட்க உறுதியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது கச்சதீவு தொடர்பாக பேச தி.மு.க.வுக்கு என்ன தகுதி இருக்கின்றது? தி.மு.க.வை விட இலங்கைத் தமிழ் மக்கள் மீது மிகுந்த அன்பு கொண்டவர் பிரதமர் நரேந்திர மோடி.

இலங்கை தமிழ் பேசும் மக்களுக்காக 51,000 வீடுகள், தொழிற்கூடங்கள், வீதிகள், ரயில் போக்குவரத்து வசதிகள், கப்பல் சேவை, கலாசார மையம் என மக்கள் வாழ்வாதாரம் உயர்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி ஏராளமான நலப்பணிகளை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு உரிமை வழங்கும் 13ஆம் சட்டத்திருத்தத்தை அமுல்படுத்த பிரதமர் நரேந்திர மோடி இரண்டு முறை வலியுறுத்தியிருக்கிறார். தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்.

எப்போதும் இல்லாதளவுக்கு மீனவர்கள் கைது செய்யப்படும் பட்சத்தில் மத்திய வெளியுறவுத்துறை துரிதமாக செயற்பட்டு, மீனவர்களுக்கு உடனடி சட்ட உதவிகளை வழங்கி அவர்களை மீட்டு வருகின்றது.

காங்கிரஸ் கூட்டணி ஆட்சியிலிருந்த போது, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணாமல், தற்போது அக்கறை உள்ளது போன்று தி.மு.க. அரசாங்கம் இரட்டை வேடம் போடுகின்றது" எனத் தெரிவித்துள்ளார்.

## மொனராகலையில்...

சுரங்கப் பணியகம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கம் காரணமாக சேத விபரங்கள் எதுவும் பதிவாகவில்லையெனவும், அப்பணியகம் மேலும் தெரிவித்தது.

## 08 கிலோ அம்பருடன் ...

இந்தப் பொருள், உலகின் விலை உயர்ந்த வாசனை திரவியம் தயாரிக்கப் பயன்படுகிறது. இதனால், திமிங்கிலங்கள் கொல்லப்படுகின்றன. இதனை விற்பனை செய்ய இலங்கை தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

## பிரேரணை சபாநாயகரிடம்...

அண்மைக்காலமாக சுகாதாரத் துறை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை சுட்டிக்காட்டி, இந்த நம்பிக்கையில்லா பிரேரணை சுகாதார அமைச்சருக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ளது.

## கண் சத்திரசிகிச்சைக்கு உதவி கோருகிறார்

பலாங்கொடையில் வசிக்கும் என். கிருஷ்ணவேணி என்ற பெண்மணி தனது கண் சத்திரசிகிச்சைக்காக நன்கொடையாளர்களிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கிறார். உதவிகளை பலாங்கொடை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் உள்ள 100910240885 என்ற கணக்கிலக்கத்தில் வைப்பிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## கௌதம் அதானியுடன்...

அதானி தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தமைக்கு 'பெரும் கௌரவம்' எனவும் கௌதம் அதானி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

அஜித் டோவாலையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

## பாரவூர்தி குடை சாய்ந்து ...

பாரவூர்தி, பறன்நாட்டகல் பிரதேசத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. இதன்போது, காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா, ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வைத்தியசாலைகளுக்கு செல்ல...

உறுதியளிப்பதாக தெரிவித்த அவர், வைத்தியசாலைகளுக்கு செல்வதற்கு நோயாளர்கள் அச்சமடைய வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார்.

வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர்கள் மற்றும் மருத்துவர்கள் நோயாளர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவர்கள் அல்ல. ஊடகங்களில் வெளியானதைப் போன்று நோயாளர்களின் உயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அலட்சியப்போக்கில் சிகிச்சை அளிக்கப்படவில்லையெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## சரத் வீரசேகர MP இனவாதம்...

கிளர்ந்து எழுவார்களெனவும், அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சாதாரணமானவர்கள் அல்ல. எனவே, தமிழினத்தை சீண்டிப் பார்க்க முனைய வேண்டாமென்று சரத் வீரசேகர எம்.பி.யை கேட்டுக்கொள்வதாகவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வங்கித்தொழில் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"13ஐ தர முடியாதென்று அவர் கூறுகின்றார். சமஷ்டியை தர முடியாதென்றும் குருந்தூர்மலையில் தமிழர், வழிபாடுகளை நடத்த முடியாதென்றும் தொடர்ச்சியாக கூறி வருகின்றார்" என்றார்.

## முஸ்லிம் தனியார்...

நீதி அமைச்சர் அலி சப்ரியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்குவதற்கான குழு அண்மையில் தமது சிபாரிசுகள் அடங்கிய மகஜரை நீதி அமைச்சரிடம் கையளித்திருந்தது. இந்நிலையில், நீதி அமைச்சர், சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீனின் தலைமையிலான குழுவினரை தனது அமைச்சுக்கு அழைத்து இது தொடர்பாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ கலந்துரையாடினார்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்திருத்த வரைபில் சில விடயங்களில் மாற்றங்களை கோரியுள்ளதை இந்தக் குழுவினரிடம் அவர் எடுத்து விளக்கினார். சட்டத்திருத்தம், இஸ்லாமிய வரையறையை மீறி வரைபு செய்யப்பட்டுள்ளதாக, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முறையிட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டத்திருத்த வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் திருத்தம் தொடர்பான வாதங்கள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு சுமுகமான தீர்வொன்றை எட்டுவதாகசட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தலைமையிலான குழுவினரிடம் நீதி அமைச்சர் தெரிவித்தார்.

## சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு...

இதன்போது, மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கு.மிகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வட மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம், யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் போது, 'தலைவர் சிவா 100' எனும் நூற்றாண்டு நினைவு ஆவண நூல் வெளியிடப்பட்டது. இதேவேளை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு ஜனனதின நிகழ்வுகள், அன்னாரின் இல்லத்திலும் நெல்லியடியில் அமைந்துள்ள அவரது சிலையடியிலும் நடைபெற்றன. இலங்கைத் தமிழ் அரசியலில் நீண்டகாலமாக செயற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான முருகேசு சிவசிதம்பரம், துணை சபாநாயகராகவும் 1968ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டு வரை பணியாற்றியுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

## எத்தகைய சவாலையும்...

கொடுப்பதற்கு அரசாங்கமும் ஜனாதிபதியும் தயாராக உள்ளதாக தெரிவித்த அவர், நாட்டை பொருளாதாரத்தில் பலமானதாக கட்டியெழுப்பும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை அதற்கு நேர் மறையான கருத்துகளே முன்வைக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

தற்போது நாம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டத்தை விட இது சிறந்த வேலைத்திட்டம். எனினும், அது இந்த சர்வதேச நாணய நிதியத்தின் வரைவுக்குள் உள்ளடங்குவதாக இருக்குமானால், அதனை நாம் பரிசீலித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அரசாங்கம் தயாராகவே உள்ளது.

இந்த வேலைத்திட்டம் நான்கு வருடங்களுக்கான வேலைத்திட்டமாக அமைந்துள்ளது. இந்த நான்கு வருடங்களுக்குள் மேற்கொள்ளக் கூடிய மறுசீரமைப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கான காலவரையறை உள்ளது. அதற்கிடையில் அதன் சாத்தியப்பாடு தொடர்பாக எவராவது நேர் மறையான கருத்துகளை முன்வைத்தால், அதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வங்கித்தொழில் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் உரையாற்றிய அவர்,

"நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக பேசுபவர்கள், இந்த வேலைத்திட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. அவ்வாறு சம்பந்தப்பட்டவர்கள் அது தொடர்பாக விமர்சனங்களை முன்வைத்தால், அதை நாம் ஏற்றுக்கொள்ளத் தயார். இந்த வேலைத்திட்டத்துக்கு வார்த்தைகளால் கூட ஒத்துழைப்பு வழங்காதவர்கள், யோசனைகளைக் கூட முன்வைக்க முன்வராதவர்கள்.

நாட்டில் கட்டியெழுப்பப்பட்டு வரும் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஒரு முயற்சியே என்றுதான் கூற வேண்டும்.

அதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது எனக்கு தெரியாது. எனினும், அவர்கள் முன்வைத்த அனைத்து தர்க்கங்களும் மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சு இணைந்து மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மூலம் தகர்க்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினர் கூட ஒரு சமயத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்குமா என்ற சந்தேகத்தையே எழுப்பினர். உண்மையில் அது போன்ற மோசமான நிலைதான் அப்போது காணப்பட்டது. மக்கள் மத்தியிலும் அதே மன நிலையே பரப்பப்பட்டது.

எனினும், நாம் எமது செயற்பாடுகளால் அதனை ஒப்புவித்துள்ளோம். எமது செயற்பாடுகள் நேர்மையாக உள்ளதால், அனைத்தையும் நாம் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளதால், இந்த செயற்பாடுகளின் மூலம் எமது பொருளாதாரத்தை நிமிர்த்த முடியுமென்ற நம்பிக்கை எமக்கிருந்தது.

நாட்டை புதிய பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கான தேவை எமக்கு உள்ளது. கடந்த 15 மாதங்களுக்கு முன் நாடு எதிர்கொண்ட நிலை மீண்டும் தலை தூக்காமல் இருப்பதற்கு நாம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

அது தொடர்பாக அரசாங்கம் நேர்மைத்தன்மையை பாதுகாப்பதுடன் அனைத்து விடயங்களையும் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கவும் நடவடிக்கை எடுக்கும்.

இதேவேளை, வங்கிகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மத்திய வங்கி மேற்கொள்ளும்போது, வங்கிகள்அல்லாத நிதி நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்னவென்று சபையில் கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

மத்திய வங்கியும் நிதியமைச்சும் இணைந்து வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களை பலப்படுத்துவது தொடர்பாக நடைமுறைப்படுத்தியுள்ள நிதி வர்த்தக சட்டத்தை திருத்துவதற்கான பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை கொண்டு வரப்பட்டுள்ள வங்கிகள் தொடர்பான சட்ட மூலத்தில் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பாகவும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், நுண்கடன் நிறுவனங்கள் தொடர்பான விவகாரமும் உக்கிரமடைந்துள்ளது. ஏற்கெனவே மங்கள சமரவீர நிதியமைச்சராக இருந்த காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனினும், கடன்களை பெற்றுக்கொண்டோர் கடன் வழங்கினோருக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு அதன் மூலம் தீர்வு காணப்படவில்லை.

யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கான ஒரு வேலைத்திட்டத்தை அன்றைய அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

இந்த நுண்கடன் விவகாரங்களில் பெரிதும் பெண்களே பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், சமூக ரீதியில் பெரும் அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன. அரசாங்கம் என்ற வகையில் நாம் அதை ஏற்றுக்கொள்கின்றோம்.

நடைமுறையிலுள்ள நுண்கடன் தொடர்பான சட்டத்தினூடாக அந்த நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் உள்ளடக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், அந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

## இரு நாடுகளினதும்...

என்றே கூற வேண்டும். இந்த பயணத்தின் போது, எனக்கும் எனது குழுவினருக்கும் உபசரிப்புகளை வழங்கிய பிரதமர் மோடிக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மேம்படுத்தப்பட்ட பொருளாதார, உட்கட்டமைப்பு, தொழில்நுட்ப முன்னேற்றங்களை பாராட்டிய ஜனாதிபதி, இந்தியாவின் வளர்ச்சி அயல் நாடுகள் மற்றும் இந்து சமுத்திர வலய நாடுகளுக்கு சாதகமான தன்மையை ஏற்படுத்தும்.

கடந்த வருடம் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார, சமூக, அரசியல் ரீதியிலான அசாதாரண சவால்கள் மற்றும் அந்த சவாலைகளை வெற்றி கொள்வதற்காக தன்னால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பாகவும் பிரதமர் நரேந்திர மோடியிடம் எடுத்துரைத்திருந்தேன்.

எமது அண்மைய வரலாற்றில் மிக சவாலான காலப்பகுதியில் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு பிரதமர் நரேந்திர மோடிக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் இந்திய மக்களுக்கும் மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கையின் அண்மைக்கால நிலைமைகளை மீளாய்வு செய்யும் போது, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் இலங்கையர்களின் அனைத்துச் சமூகங்களுக்கும் பலன் கிட்டும் வகையில் நீதி, நியாயத்துடனான நிலையான, ஸ்திரமான அபிவிருத்தியை நோக்கிய பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான எனது அர்ப்பணிப்புகளை பிரதமர் நரேந்திர மோடிக்கு எடுத்துரைத்துள்ளேன்.

இதற்கப்பால் சென்று இலங்கையை பாரிய பொருளாதார மறுசீரமைப்பு பாதைக்கு இட்டுச் சென்றுள்ளதையும் இந்தச் செயற்பாடுகளின் நிலையான பிரதிபலன்களை இலங்கை தற்போது அடைந்துள்ளதாகவும் நாட்டின் முன்னேற்றம் தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ளதையும் நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

மறுசீரமைப்பு, அதிகாரப்பகிர்வு, அதிகாரப்பரவலாக்கம், வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பல தரப்பட்ட விடயங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக நான் முன்வைத்த பரந்துபட்ட யோசனை தொடர்பாக கருத்துகளையும் நான் அவருடன் பகிர்ந்துகொண்டேன். இந்தப் பணிகள் தொடர்பாக இணக்கப்பாட்டுடன், தேசிய ஒற்றுமைக்காக பணியாற்றுமாறு நான் பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். இந்த முயற்சிகளின் போது, பிரதமர் நரேந்திர மோடி, தனது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நாம் தற்போது எமது பொருளாதாரத்தை, நாட்டுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தருவதும், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் மேம்படுத்தப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குவதற்கும் அவசியமான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும்.

இந்த நோக்கத்தை வெற்றி கொள்வதற்காக பலமான பங்களிப்பை அடித்தளமாகக் கொண்டு மேம்படுத்தப்பட்ட தொடர்புகளூடாக எதிர்கால இலங்கை இந்திய பொருளாதார கூட்டிணைவுக்காக ஒருங்கிணைந்த நோக்கத்துக்காக ஒன்றுபட வேண்டும்.

எமது இருதரப்பு இராஜதந்திர தொடர்புகளில் 75ஆவது வருடத்தை பூர்த்தி செய்யும் போது, அடுத்த சில தசாப்தங்களில் எமது எதிர்கால சந்ததியினருக்காக வழங்கக்கூடிய வாய்ப்புகள் மற்றும் மேலதிக வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான உள்ளக செயற்பாடுகளூடாக மிகவும் பாதுகப்பான எதிர் காலத்தை நோக்கி செல்வதற்கான இயலுமை பற்றியும் ஆராய்ந்தோம்.

இரு நாடுகளுக்கும் இடையில், பல தசாப்தங்கள் பழமையான நாகரிகம், கலாசார, மானிட மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் போதான உள்ளகச் செயற்பாடுகள் வாயிலாக எமது ஒன்றிணைந்த நோக்குக்கான அடித்தளம் உருவாகியுள்ளது.

எமது உறவுகள் என்ற நூல் வரலாற்றிலிருந்தே பிரித்தெடுக்கப்பட்டுள்ளது. எமது எதிர்கால இலக்குகளுக்கான ஆரம்பத்துக்கு நிகழ்காலமே மிகச் சிறந்த தருணமாகும்.

பொருளாதாரப் பங்காளித்துவத்தின் தொலைநோக்கு பார்வையை நனவாக்குவதில் நவீன இணைப்பு முக்கிய பங்காற்றுகிறது. அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சென்னை மற்றும் யாழ்ப்பாண விமான சேவைகள், இரு நாடுகளுக்கும் இடையிலான விமான இணைப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இரு நாடுகளுக்குமிடையில் விமான சேவைகளையும் கப்பல் சேவைகளையும் மேம்படுத்த உடன்பாடு காணப்படுகிறது. அது சுற்றுலா மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்தும்.

தலைமன்னார் இராமேஸ்வரம் மற்றும் நாகபட்டினம் காங்கேசன் துறை ஆகிய பகுதிகளுக்கிடையிலான கப்பல் சேவை இரு நாடுகளுக்கான கடல்வழிப் போக்குவரத்துக்கு வலு சேர்க்கும். இலங்கை மற்றும் இந்திய உறவுகளுக்கான வேறு வழிமுறைமைகள் தொடர்பாக ஆராய்வதும் பொருளதார வளர்ச்சிக்கு மற்றுமொரு வலுவாக அமையும்.

புதிய மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டிய துறைகளுக்கு இருதரப்பு பொருளாதாரம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை மற்றும் இந்தியா பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை மிகவும் முக்கியமானது என்ற விடயத்துக்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம். டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக சேவை வழங்கல் மற்றும் தனி நபர்களை மையப்படுத்திய சேவைகளுக்கான இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள இலங்கை ஆர்வமாக உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் மேம்படுத்தப்படும் தொடர்பாடல், சுற்றுலாத்துறை, மனிதர்களுக்கிடையிலான பரிமாற்றங்கள் மற்றும் கலாசார தொடர்பாடல்கள் உள்ளிட்ட துறைகளை வலுவூட்டுவதற்கான முக்கியமான விடயங்களுக்கு நாம் இணங்கியுள்ளோம். தொற்றுநோய் பரவலுக்கு பின்னராக காலப்பகுதியில், இலங்கையின் சுற்றுலாத்துறை தனது வருமானத்தை மேம்படுத்திக்கொள்ளும் நோக்குடன் இருக்கின்றது. இந்தியர்களின் இலங்கைக்கான சுற்றுலா மிகப்பெரிய சந்தையாக மாறியுள்ளது. அதனால், *Unified Payments Interface (UPI)* முறைமையை அடிப்படையாக கொண்ட டிஜிட்டல் கொடுக்கல், வாங்கல் முறைமையை வலுவூட்டுவதால், ஏனைய துறைகளையும் பலப்படுத்த முடியும்.

பசுமை பொருளாதாரத்துக்கு இலங்கையின் தேசிய முக்கியத்துவம் உலக அர்ப்பணிப்புக்களுக்கு இணங்க வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் பசுமை மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுவூட்டலுக்கான இந்தியாவுடன் கைகோர்த்துக்கொள்வது பெறுமதியான வாய்ப்பு என இலங்கை கருதுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கான துறைசார் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பிலும் வலியுறுத்துகிறேன். இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான அதிக வலுவுடனான மின் பரிமாற்ற தொடர்பு கட்டமைப்பு ஒன்றை நிறுவினால் இருநாடுகளுக்கும் இடையிலான இருவழிப்பாதை மின் வர்த்தகத்துக்கான வழியை ஏற்படுத்தும்.

இந்தியாவின் ஒத்துழைப்போடு, திருகோணமலை இலங்கையின் வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பிலான மையமாகவும் திருகோணமலையை மேம்படுத்துவது தொடர்பிலான இலங்கையின் இலக்கு முக்கியமானதாகும்.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நான் நம்பிக்கை கொண்டுள்ள வகையில், இந்தியாவின் தெற்கு பகுதியிலிருந்து இலங்கை வரையிலான பல்துறைசார் பெற்றோலிய குழாய் கட்டமைப்பொன்றை உருவாக்குவதால், இலங்கையினால் வழங்கக் கூடிய உறுதியான வலுசக்தி விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் என்பதே பிரதமர் மோடியினதும் எனதும் எதிர்பார்ப்பாகும்.

சமூக பொருளாதார அபிவிருத்தியின் அதிகமான இலக்குகளை அடைந்துகொள்வதற்கான எமது பொது முயற்சியை வெற்றி கொள்வதற்காகவும், எமது மக்களின் போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கான பால் உற்பத்தி மற்றும் கால்நடை துறைகளில் எமது ஒத்துழைப்புகளை மேம்படுத்திக் கொள்வது தொடர்பிலும்கலந்தாலோசித்தோம்.

கல்வித்துறையின் ஒத்துழைப்பு எமது இருதரப்பு உறவுகளின் முக்கிய அம்சமாக காணப்படுகிறது. இந்திய உதவியுடன் இலங்கைக்குள் புதிய உயர் கல்வி நிறுவனங்களை நிறுவுவது முக்கியமானதென நம்புகிறோம். இதனால் எமது இளைஞர், யுவதிகளில் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த முடியும் என்பதோடு அவர்களை தேசிய அபிவிருத்தி பொறிமுறைக்குள் உள்வாங்கப்படுவர்.

எமது இருதரப்பு தொடர்புகளை மீளாய்வுச் செய்வதற்காகவும், உலக மற்றும் கலாசார தொடர்புகளை வலுவாக பயன்படுத்திக்கொள்ளவும் நவீன உலகத்தில் எமது எதிர்கால எதிர்பார்ப்புக்களுக்கான நம்பிக்கையை உறுதிப்படுத்த எனது இந்திய விஜயம் வாய்ப்பளித்துள்ளது என நம்புகிறேன்.

இன்று நாம் நடத்திய கலந்துரையாடல் இலங்கை இந்தியாவின் அடுத்த 25 வருடங்களுக்கான அடித்தளத்தை இடும் என்றும் இலங்கை அனைத்து சமூக குழுக்களினதும் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய ஒருமைப்பாடு இலங்கையின் அனைத்து சமூகத்தினர் மத்தியிலுமான நல்லிணக்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு சுபீட்சமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான எனது நோக்கத்துக்கு உதவும் என நம்புகிறேன்'' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## கிழக்கு பல்கலை மாணவர்கள் வந்தாறுமூலை வளாகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம்





**(ஏறாவூர் நிருபர்)**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாகத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். விடுதி வளாகத்திலிருந்து பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு பிரதான வீதிக்கு வந்த மாணவர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பிரதான வீதியில் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அனைத்து பீடங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

இம்முறை கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவுக்கு குறைவான நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்தே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விளையாட்டுப் பயிற்சிகளுக்காக மைதானம் புனரமைப்புச் செய்யப்படாமை, போதியளவு விளையாட்டு உபகரணங்களின்மை, வளப்பற்றாக்குறை இன்மை போன்ற காரணங்கள் தொடர்பில் இதன்போது மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

மூன்று வருடங்களுக்கு ஒருதடவை சுழற்சி முறையில் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் நடாத்தப்படும் விளையாட்டு விழாவினை நடாத்தும் சந்தர்ப்பம் சுமார் 40 வருடங்களின் பின்னர் கிடைத்துள்ளது. இருந்தபோதிலும் கிழக்கு பல்கலைக்கழகத்திலுள்ள திறமையான மாணவர்கள் ஊக்குவிக்கப்படவில்லையென பல்கலைக்கழக நிர்வாகத்தின் மீது மாணவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். மேலும் விளையாட்டு விழாவுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் பெரும் பகுதி விழாவின் களியாட்டங்களுக்காக செலவிடப்படவுள்ளதை கண்டிப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் ஐயாயிரம் ரூபா புலமைப்பரிசில் நிதி கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டுமென மாணவர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அஸ்வெசும

## நலன்புரித்திட்டம் சமுர்த்தி திட்டத்தோடு இணைந்ததாகவே முன்னெடுக்கப்படும்

### இறக்காமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர்

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**



அரசாங்கம் 'அஸ்வெசும' நலன்புரித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள நிலையில் சமுர்த்தித் திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் எவ்வித தடைகளுமின்றி சமுர்த்தி வங்கியினூடாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று இறக்காமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரீ.கே. றஹ்மத்துல்லா தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

சமுர்த்தி வங்கியில் கணக்கு வைத்துள்ள சமுர்த்தி பயனாளிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் கணக்குகள் தொடர்ந்தும் நடைமுறையில் பாதுகாப்புடன் என்றும் முன்னெடுக்கப்படும் என்பதில் வாடிக்கையாளர்கள் எவரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அஸ்வெசும திட்டத்தினை அரசாங்கம் முன்னெடுத்துள்ள போதிலும் சமுர்த்தி திட்டத்தினூடான சேமிப்பு வசதிகள், குறைந்த வட்டி வீதத்திலான கடன் வசதிகள், ஏனைய சமூகப் பாதுகாப்பு உதவிகள், வாழ்வாதார உதவி திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டங்கள் போன்ற நன்மைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

மேலும், சமுர்த்தி வங்கியினூடாக பொது மக்களுக்கான சேவைகளை விஸ்தரிப்பதற்கு சமுர்த்தி திணைக்களம் நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில், அரச ஊழியர்களுக்கான கடன் சேவை, நீர் கட்டணம், மின்சாரக் கட்டணம், அடகு எடுப்பது போன்றனவற்றுடன் ஏ.ரீ.எம். இயந்திர வசதிகளையும் நிறுவ உள்ளது.

இந்நிலையில், சமுர்த்தி வங்கியில் உள்ள பணம் மீள திருப்பப்படும் என்றும், சமுர்த்தி வங்கிகள் மூடப்படும் என்ற வதந்திகளினால் அதன் வாடிக்கையாளர்கள் வீண் சிரமங்களுக்கு மத்தியில் வங்கிகளுக்கு நாளாந்தம் வருகை தந்து சிரமம் படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பணியாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகிவருகின்றனர்.

எனவே, பொது மக்கள் வீண் வதந்திகளையும், பொய் பிரசாரங்களையும் நம்பி ஏமாறாமல் உங்களுக்கான கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் மற்றும் வங்கியின் வழமையான நடவடிக்கைகளில் எவ்வித தடைகளுமின்றி தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்படும் என்று அவர் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள் சாகசக்கிணறு உடைந்து விழுந்ததில் பொலிஸ் உத்தியோகத்தர் பலி

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**



திருகோணமலை கந்தளாய் பகுதியில் கலை நிகழ்வொன்றில் மோட்டார் சைக்கிள் சாகசம் காண்பிப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் சாகசக்கிணறு உடைந்து விழுந்ததில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் கலைநிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் மோட்டார் சைக்கிள் சாகசக் கிணறு உடைந்து விழுந்தமையால் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கந்தளாய் லைட் வீதியில் வசித்துவரும் ஜானக சுரஞ்ஜீவ என்ற 45வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கந்தளாய் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



விவேகானந்த மனித வள மேம்பாட்டு நிலையத்தில் கற்கையை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா மஹாராஜ் தலைமையில் விபுலானந்தா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (20) நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சுவாமி விபுலானந்தரின் சமாதியில் மலர்தூவி வழிபாடுகளில் ஈடுபட்டார். (படங்கள்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

## தொழிற்சந்தை, தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வு

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்துடன் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் களுதாவளை கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வில் அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி, தனியார் தொழில் வழங்கல் ஆகிய 30க்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்று தங்கள் நிறுவனங்களின் சேவைகள் பற்றி இதன்போது பங்கேற்றிருந்த இளைஞர் யுவதிகளுக்கு தெளிவுப்படுத்தியதுடன் தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

பிரதேச செயலக மனிதவள மேம்பாட்டு உத்தியோகத்தர்களான க.ரவீந்திரன் மற்றும் தெ.ராகவன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மல்ராஜ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் 400ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தாதியர் பயிற்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி தையலாளர், மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி திருத்துனர், அழகுக்கலை மற்றும் சிகை அலங்கரிப்பாளர், வெதுப்புனர், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம், மரக்கைவினைஞர், அலுமினியம் பொருத்துனர், மின்னியலாளர், உருக்கி ஒட்டுனர், நீர்க்குழாய் பொருத்துனர், கணணி வடிவமைப்பாளர், கணணி பொறிமுறை, கட்டுப்பாட்டாளர் உள்ளிட்ட பல துறைகளைச் சேர்ந்த அமைப்புக்கள் இதன்போது இளைஞர் யுவதிகளுக்கு விளக்கங்களையும், தகவல்களையும் வழங்கினர்.

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு

**(ஒலுவில் விசேட நிருபர்)**

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கோரிக்கைக்கமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொது மக்கள் தொடர்பாடல் பிரிவை திறந்து வைத்தார்.

பொது மக்களுக்கு வினைதிறன்மிக்க சேவைகளை வழங்கும் பொருட்டும் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு அர்ப்பணிப்புமிக்க சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாகவும் வேலைகளில் ஏற்படும் தாமதம் மற்றும் குறைபாடுகளை இனங்கண்டு உடனடியாக தீர்ப்பதற்கு ஏதுவாகவும் இவ்வலகு திறந்து வைக்கப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

இதன்மூலம் வேலை நாட்களில் உரிய உத்தியோகத்தர்களை பொதுமக்களோடு ஒருங்கிணைக்கவும் பயண விரயங்களைக் குறைத்து செயற்றிறன்மிக்க சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாகவும் பொதுமக்கள் தொடர்பாடல் அலகு திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு அதனை முகாமைத்துவம் செய்வதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொது மக்கள் தொடர்பாடல் அலகிற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் பொதுமக்கள் குறைதீர்க்கும் முறைமையை கையாளுவதோடு தகவல் அறியும் சட்டம் தொடர்பான விடயங்களை பிரதி பணிப்பாளரோடு ஒருங்கிணைக்கும் பணியையும் மேற்கொள்வதோடு, ஒவ்வொரு வேலைகளுக்குமான பரிசோதனைப் பட்டியலை வழங்கி குறித்த விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரை பொது மக்கள் தொடர்பாடல் அலகிற்கு வரவழைத்து இலகுவாக தீர்த்து வைப்பதோடு. விடயம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பார் எனவும் தெரிவித்தார்.

## வர்ண உடற்பயிற்சி போட்டியில் விபுலானந்தா முதலிடம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**

பட்டிருப்பு கல்வி வலயத்தால் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட வர்ண உடற்பயிற்சி போட்டியில் திருப்பழுகாமம் விபுலானந்த வித்தியாலய அணி முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம்சிறீதரனின் ஆலோசனை வழிப்படுத்தலின் கீழ், உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் த.இதயகுமாரின் மேற்பார்வையில் கோவில் போரதீவு பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் போட்டிகள் நடைபெற்றன.

தரம் III வகைப் பாடசாலைகளுக்கிடையில் இருநூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் மிக சிறப்பாக செயற்பட்ட திருப்பழுகாமம் விபுலானந்த வித்தியாலய அணி முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

## மாற்று திறனாளிகளுக்கான உதவித்தொகை வழங்கி வைப்பு



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உதவித்தொகை வழங்கி வைத்ததுடன், நந்தவனம் முதியோர் இல்லம், ADVRO முதியோர் இல்லம், கிழக்கு இஸ்லாமிய மாற்றுத்திறனாளிகள் இல்லம், முஸ்லிம் முதியோர் இல்லம் போன்றவற்றின் நிர்மாணப் பணிகளுக்கு நிதியுதவியும் வழங்கி வைத்தார்.



கல்முனை வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ பிரதிகல்விப்பணிப்பாளராக கல்வி நிர்வாக சேவை தரம் இரண்டைச் சேர்ந்த எம்.வை.றியாஸா நேற்று கடமையேற்றுக் கொண்டார். பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜிஹானா அலிப் மற்றும் உத்தியோகத்தர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# பலாங்கொடை பொதுவைத்தியசாலை குறைபாடுகளை தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**



பலாங்கொடை பொதுவைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை பொது வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை கண்டறிவதற்காக நேற்றுமுன்தினம் (20) பலாங்கொடை பொதுவைத்தியசாலைக்கு நேரில் சென்று அதன் நிலைமைகளை பார்வையிட்டார்.

வைத்தியசாலையில் கர்ப்பிணி மற்றும் குழந்தை வார்ட்டுத்தொகுதி உட்பட வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள ஏனைய பிரச்சினைகள் குறித்து மாகாண ஆளுநர் வைத்தியர்களிடம் கலந்துரையாடினார்.

பலாங்கொடை பொது வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதுகுறித்து கூடிய கவனம் செலுத்தப்படும் என்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

## மலைச்சாரல்

# மின்னேரியவில் விபத்து ஐவர் படுகாயம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு காத்தான்குடியிலிருந்து கடந்த (19) புதன்கிழமை கொழும்பு விமான நிலையத்தை நோக்கி சென்ற வான் மின்னேரியவில் வைத்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

வான் காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவருடையது என தெரியவருகின்றது.

வான் காத்தான் குடியிலிருந்து கொழும்பு விமான நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்த போது மின்னேரியவில் வைத்து தனியார் பஸ் வண்டியுடன் மோதுண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பயணித்தவர்களில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வானின் முன்பகுதி சேதமடைந்துள்ளது.

# நோர்வூட் - பொகவந்தலாவ பிரதான வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நோர்வூட் பொகவந்தலாவ பிரதான வீதியின் புனரமைப்பு பணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுமார் 7 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படவுள்ளது. கொவிட் 19 தொற்று காலங்களில் கைவிடப்பட்ட வீதி அபிவிருத்தி பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்தகாலங்களில் குண்டும் குழியுமாக காணப்பட்ட வீதியால் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயாளிகள், வாகனசாரதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக புகார் தெரிவித்ததை தொடர்ந்து புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து கொட்டகலை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் அதிகாரியிடம் கேட்ட போது, கடந்த சில நாட்களாக மத்திய மலைநாட்டில் மழை பெய்து வருகின்றது. நோர்வூட் முதல் பொகவந்தலாவ வரை உள்ள வீதிகளை வெகுவிரைவில் புனரமைக்கமுடியுமென அவர் தெரிவித்தார்.



கொழும்பு புறக்கோட்டை இந்து இளைஞர் நற்பணி மன்றத்தினால் அண்மையில் இராகலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை, அப்பியாச கொப்பிகள், பாதணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன அதன் தலைவர் சுரேஷ் மற்றும் நிர்வாக குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டன. (படம் தலவாக்கலை குறூப் நிருபர்)



ஹற்றன் செம்புகவத்த ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வை இங்கு காணலாம். (படம் கினிகத்தேனை தினகரன் நிருபர்)

# கண்டி எசல பெரஹரா மின்சார கட்டணம் குறித்து கலந்துரையாடல்

**எம்.ஏ.அமீனுல்லா**

மின்சார சபை வழங்கிய மதிப்பீட்டை மீள்பரிசீலனை செய்ய தயாராகவிருப்பதாகவும் ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல பண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி தலதா பெரஹரா உற்சவத்திற்கான மின்விளக்குகள் தொடர்பில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டி எசல பெரஹராவுக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் மின்சார சபை சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக தியவதன நிலமே தெரிவித்தார்.

மேலும் நான்கு மகா தேவல பஸ்நாயக்க நிலமேக்கள் மற்றும் , கண்டி மாவட்ட செயலாளர், மின்சார சபை பிரதிநிதிகள் உட்பட அரச அதிகாரிகள் குழு இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர் .

கண்டி எசல பெரஹராவுக்காக மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட நிதி மதிப்பீடு தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பெரஹராவுக்கு ஒவ்வொரு வருடமும் தனியான மின்சாரக் கட்டணம் முன் வைக்கப்படுவதாகவும், ஆனால் அதற்கான கொடுப்பனவுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி இறுதி இணக்கப்பாடு எட்டப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கின் உதயம்

# முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு டாக்டர் விக்கினேஸ்வரா நினைவாக நூல்கள் அன்பளிப்பு



ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனின் 'பள்ளிக்கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்ல' நூல் முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

போர் கடுமையாக இடம்பெற்ற காலத்தில் கூட வடக்கு கிழக்கின் கல்வி வீதம் கொழும்புக்கு சவால் விடுமளவுக்கு உச்சத்தில் இருந்தது.

வன்னியில் குழந்தைகள் மீண்டும் ஒருமுறை கல்விப்புரட்சி நிகழ்த்த "பள்ளிக்கூடங்கள் வெறும் கட்டடக்கூடுகள் அல்ல" என்ற கல்வி சார் விழிப்புணர்வு நூல் எழுதப்பட்டுள்ளது.

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய இந்த நூலை டாக்டர் பரமநாதன் விக்கினேஸ்வரா நினைவாக ஜீவநதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி, பாலிநகர் மற்றும் கோட்டைகட்டியகுளம் பிரதேசத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகம் சென்ற வ.கலையரசி, கி.அலெக்‌ஷன், சி.கருணிகா, யோ.துசாந்தன், ப.கயல்விழி, அ. ராதிகா, ச.சாலினி ஆகிய மாணவர்களால் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

மல்லாவி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை, துணுக்காய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, உயிலங்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, ஐயன்கன்குளம் மகாவித்தியாலயம், பாலிநகர் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு விழிப்புணர்வு நூல் வழங்கப்பட்டுள்ளது.



நீர்வேலி வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் ஆலய குரு பிரம்மஸ்ரீ சோமசுந்தர குருக்கள் பிச்க்ஷாடன குருக்களின் ஆச்சாரிய அபிஷேகம் (குருப்பட்டம் தரித்தல்) நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

## நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா

# யாழ். மாநகர சபை ஆணையாளர் தலைமையில் முன்னாயத்தக் கூட்டம்

**யாழ்.விசேட நிருபர்**



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா ஆகஸ்ட் 21ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அதனுடைய ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இதுதொடர்பில் பல்வேறு தீர்மானங்கள் எட்டப்பட்டது.

குறித்த தீர்மானங்களின் படி,

ஆகஸ்ட் 20ஆம் திகதி காலையிலிருந்து நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு, செப்டம்பர் 16ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னர் நள்ளிரவே திறந்து விடப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகள் எல்லையிடப்படும். வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாது.

அதேபோல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவுசெய்ய முடியாது. காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற வருகின்ற தூக்கு காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும்.

அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்.மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ்.நகரை அடைய முடியும்.

ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் நல்லூர் கந்தசுவாமி ஆலய பிரதிநிதிகள், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரது பிரதிநிதி, யாழ் மாநகர சபை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# மலையக 200 நினைவாக தலைமன்னாரிலிருந்து நடைப்பயணம்

**தலைமன்னார் விசேட நிருபர்**

மலையக மக்கள் தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை நடைப் பயணமாக வந்து குடியேறிய 200 வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெறும் நடைபயணத்துக்கு மன்னார் மக்களும் ஆதரவு வழங்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருட பூர்த்தியை முன்னிட்டு தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை நடைபயணமாகவே வந்து மலையகப் பகுதியில் குடியேறியதாக வரலாறு தெரிவிக்கின்றது.

இதை அடிப்படையாக கொண்டே இம்மாதம் 29ஆம் திகதியிலிருந்து (29.07.2023) ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி வரை தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையிலான ஒரு நடைப்பயணத்தை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவின் மாதாந்த ஆளுநர் சபைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன் ஒத்துழைப்பு வழங்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# நகர்வலம்



# தினகரன் ஹஜ்ஜுப் பெருநாள் சிறுவர் விளையாட்டுகள், கிரிக்கெட் மற்றும் உதைப்பந்தாட்ட போட்டிகள்





பேருவளை விசேட நிருபர்

தினகரன் பத்திரிகையின் 91 ஆவது ஆண்டினை முன்னிட்டு பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மைதானத்தில் சிறுவர்களுக்கான மாபெரும் விளையாட்டு நிகழ்ச்சி இன்று 22ஆம் திகதி நடைபெறுகிறது.

'இன்றைய சிறுவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள்' என்ற தொனிப் பொருளில் இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 9.00 மணிக்கு மேற்படி பாடசாலையின் அதிபர் எஸ்.ஆர்.குமார் தேசிய கொடியை ஏற்றி போட்டிகளை ஆரம்பித்து வைப்பார்.

ஏற்பாட்டுக் குழுத் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான எம். பாஸி ஸுபைர் தலைமையில் நடைபெறும் இப்போட்டி பரிசளிப்பு விழாவில் புரவலர் ஹாஷிம் உமர், தினகரன், தினகரன் வார மஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்வர்.

நாளை 23ஆம் திகதி மாலை நடைபெறும் கிரிக்கெட் மற்றும் உதைப்பந்தாட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழாவில் இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின்

முன்னாள் தலைவரும் ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் ஸ்தாபகருமான டொக்டர் எம்.எச்.எம்.ரூமி



ஒருங்கிணைப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம்.முக்தார்



மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை அதிபர் எஸ்.ஆர். குமார்

ஹாஷிம் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி சட்டத்தரணி ஆர். சிவ குருநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக கிரிக்கெட் போட்டியும் தர்கா நகர் வை.எம்.எஸ்.ஸி. விளையாட்டுக் கழக முன்னாள் உதைப்பந்தாட்ட வீரர் பொறியியலாளர் மர்ஹூம் முஹம்மத் ஹாசிம் முஹம்மத் ரஸ்மி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான உதைப் பந்தாட்டப் போட்டியும் நாளைய தினம் நடைபெறவுள்ளது.

உதைப்பந்தாட்டப் போட்டி தர்கா நகர் வை.எம்.எஸ்.ஸி. விளையாட்டுக் கழகத்திற்கும் பேருவளை பர்பரீன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே (45 வயதுக்கு மேல்) உதைப்பந்தாட்டப் போட்டி இடம் பெறுவதோடு தர்கா நகரைச் சேர்ந்த எம்.தாஹிர் பாஸி தலைமையிலான கிரிக்கெட் அணிக்கும் பேருவளை



ஏற்பாட்டுக்குழுத் தலைவர் சமூக சேவையாளர் எம். பாஸி ஸுபைர்



இலங்கை மருந்தாக்கக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவரும் ரூமி ஹாஷிம் பவுன்டேசன் ஸ்தாபகருமான டாக்டர் ரூமி ஹாஷிம்

மாளிகாசேனை ஸன்ரோஸ் கிரிக்கெட் அணிக்குமிடையிலான (40 வயதுக்கு மேல்) போட்டியும் நடைபெறவுள்ளது.

இன்றைய தின பரிசளிப்பு விழாவிலும் நாளைய தின பரிசளிப்பு மற்றும் பிரமுகர் கௌரவிப்பு வைபவத்திலும் பிரதேசத்தில் உள்ள அரசியல்வாதிகள், உலமாக்கள், கல்விமான்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், அதிபர் எஸ்.ஆர். குமார் உட்பட அப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொள்வர்.

இந்த விழாவினை முன்னிட்டு மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் பாடசாலை மற்றும் விளையாட்டு மைதான வளாகம் விழாக் கோலம் பூண்டு காணப்பட்டுள்ளதுடன், தேசிய கொடிகள், தினகரன் கொடிகள் பிரதேசம் எங்கும் தொங்கவிடப்பட்டுள்ளன.

சிரேஷ்ட ஊடகவியலாளர் அல்ஹாஜ் பீ.எம்.முக்தாரின் ஒருங்கிணைப்பிலும் சமூக சேவையாளர் எம். பாஸி ஸூபைரின் ஏற்பாட்டிலும் சமூக சேவையாளர் எம். ரியாஸ்தீன் இமாம்தீன், பாடசாலை அதிபர் எஸ்.ஆர்.குமார் ஆகியோரின் பங்களிப்போடும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## பசுமை காலநிலை நிதிய அங்கீகாரத்தைப் பெற்ற முதல் இலங்கை நிறுவனம் DFCC வங்கி



தென் கொரியாவின் Songdo Incheon இல் சமீபத்தில் நடைபெற்ற 36 ஆவது GCF பசுமை காலநிலை நிதியத்தின் வாரியக் கூட்டத்தில் DFCC வங்கி வழங்கிய விண்ணப்பதிற்கு அங்கீகாரம் கிடைக்கப்பட்டதன் மூலம், இலங்கை முழுவதும் காலநிலை தணிப்பு மற்றும் தழுவல் திட்டங்களுக்கு வங்கி நிதியளிக்க முடியும்.

GCF அங்கீகாரத்தைப் பெறுவதற்கான கடுமையான செயல்முறையைத் தொடர்ந்து, DFCC வங்கி, காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதிலும், நிலையான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதிலும் முன்னணியில் உள்ள 118 நிறுவனங்களின் வரிசையில் இணைந்துள்ளது.

DFCC வங்கி பசுமை காலநிலை நிதியத்தின் (GCF) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதோடு ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக USD 250 மில்லியன் சலுகை நிதியை அணுக முடியும், அவை ஒப்புதல் பெறுவதற்கு உட்பட்ட திட்டங்களின் எண்ணிக்கையில் எந்த வரம்பும் இல்லை.

காலநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டின் (UNFCCC) கீழ் 194 நாடுகளால் 2010 இல் நிறுவப்பட்ட GCF, காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ள வளரும் நாடுகளின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.பச்சைவீட்டு வாயுகசிவை தணிப்பது மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளையில் காலநிலை நெகிழ்ச்சித்தன்மையை அதிகரிப்பதில் இந்த நிதி கவனம் செலுத்துகிறது. GCF அங்கீகாரத்தைப் பெற்றுள்ள 118 நிறுவனங்கள், பல்வேறு வகையான சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

DFCC வங்கியின் தலைவர் ஜே. துரைரட்ணம் கூறுகையில்,

பசுமை காலநிலை நிதியத்தால் அங்கீகாரம் பெற்ற முதல் இலங்கை நிறுவனம் என்ற பெருமையை நாங்கள் பெற்றுள்ளோம். இந்தச் சாதனையானது DFCC வங்கியின் நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்பிற்கு ஒரு சான்றாகும், இது எங்களின் நிலைத்தன்மை உத்தி மற்றும் அனைவருக்கும் ஒரு நெகிழ்ச்சியான உலகத்தை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையால் வழிநடத்தப்படுகிறது. இலங்கை எதிர்கொள்ளும் அவசர காலநிலை சவால்களை எதிர்கொள்ளும் வகையில் காலநிலை நிதி மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்த அங்கீகாரத்தைப் பயன்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

## சவூதி அரேபிய குர்ஆன் மனனப் போட்டியில் சீனன்கோட்டை முஹம்மத் யூனுஸ் இம்ரான்

### ஐந்து ஜுஸு மனனப் போட்டியில் இரண்டாமிடம்

(பேருவளை பீ.எம். முக்தார்)




பேருவளை சீனன்கோட்டை பெருகமலையைச் சேர்ந்த மாணவன் முஹம்மத் யூனுஸ் இம்ரான் சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சின் அனுசரணையுடன் இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதரக கண்காணிப்பில் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் முதல் தடவையாக நடாத்தப்பட்ட குர்ஆன் மனனப் போட்டியில் (12 வயதுக்கு கீழ்ப்பட்ட) ஐந்து ஜுஸு மனனப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று பேருவளைக்கு புகழ் சேர்த்துள்ளார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இயங்கும் மதீனதுல் இல்ம் அரபுக் கல்லூரியில் தற்போது ஹிப்ழ் பிரிவில் கற்றுக் கொண்டிருக்கிறார்.

பேருவளை சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை மற்றும் பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா ஆகியவற்றின் பழைய மாணவனான யூனுஸ் இம்ரான் சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாஅத் நடாத்தி வரும் மீலாத் சன்மார்க்க அறிவுப் போட்டியில் குர்ஆன் மனனப் போட்டியிலும் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளதோடு குர்ஆன் மத்ரஸா மீலாத் விழா போட்டிகளிலும் கிராஅத் மனனப் போட்டியில் பல தடவைகள் வெற்றி பெற்று பரிசில்களை பெற்றுள்ளார்.

இவர் பெருகமலை ஸாக்கிரீன் பள்ளிவாசல் பிரதம இமாம், குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் மௌலவி எஸ்.எச். எம். இம்ரான் (ஹுமைதி) பாத்திமா ரிபானா தம்பதிகளின் புதல்வராவார்.

## சட்டவிரோத கனிம அகழ்வில் ஈடுபட்ட 12 சீனர்கள் கைது

### நைஜீரியாவின் 16 இடங்களில் சீன நிறுவனம் அத்துமீறல்

சட்டவிரோத கனிம அகழ்வுக்காக நைஜீரியாவின் க்வாரா மாநிலத்தில் சுரங்கம் அமைத்த 12 சீனர்கள் அந்நாட்டின் பொருளாதார மற்றும் நிதிக் குற்றங்களுக்கான ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு பெண்ணும் அடங்குவார்.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவல்களின் அடிப்படையில் அரசுக்கு சொந்தமான இங்லோரின் பகுதியில் சுரங்கம் தோண்டிய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனிம அகழ்வுகளை அரசு அனுமதியுடனேயே மேற்கொண்டுள்ளோம். இவர்களை விசாரித்தபோது இம் மாகாணத்தின் 16 அரசு இடங்களில் இவர்கள் சார்ந்த நிறுவனம் அகழ்வில் ஈடுபட்டிருப்பது தெரிய வந்தது.

திருட்டுத்தனமாக அகழ்வதன் மூலம் கிடைக்கும் பாறைகளை பயன்படுத்தி பளிங்குக் கற்களை உற்பத்தி செய்வதே இந்நிறுவனத்தின் நோக்கம் எனத் தெரியவந்துள்ளது.

இம்மாகாணம் கனிம வளங்களுக்கு பிரசித்திபெற்றதால் இங்கே பல சட்டவிரோத சுரங்கங்கள் இயங்கி வருகின்றன.



பேருவளை மஹகொடை ஷாதுலிய்யா ஸாவியாவில் வருடாந்த ஷாதுலிய்யா மனாகிப் தமாம் மஜ்லிஸ் (16) இரவு கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம் ரரபமுக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெற்றது. ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபா மௌலவி எம். இஸட் முஹம்மத் ஸுஹுர் (பாரி) நிகழ்வில் ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் நூர் ஹாஜியார் தலைமையில் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கொழும்பு உம்மு ஸாவிய்யா பிரதம இமாம் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம். எஸ் அஹ்மத் ஸுபி (மஹ்லரி) துஆப் பிரார்த்தனை நடாத்தினார்.

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் – உலக உணவுத்திட்ட பிரதிநிதிக்கிடையில் சந்திப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனுக்கும் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஜெராட் ரெபெல்லாவுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (20) வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உலக உணவுத் திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பை ஊக்குவிக்கும் நோக்கில், போசாக்கு உலருணவு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள், நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குறைந்த பொருளாதார வசதியுடைய குடும்பங்கள் என்ற வகைகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு போசாக்கு உலருணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொதிகளை வழங்கவுள்ளது.

இதன்போது, இத்திட்டம் தொடர்பான அறிமுக உரையினைத் தொடர்ந்து, கிளிநொச்சி மாவட்டத்தில் குறித்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

## பிரதமர் மோடிக்கு அதிஉயர் பிரெஞ்சு கௌரவம்

பிரெஞ்சு அரசு, இராணுவ மற்றும் சமூக தளங்களில் வழங்கக்கூடிய ஆக உயர்ந்த விருதான 'கிரேன்ட் குரொஸ் ஒப் த லிஜன் ஒப் ஹொனர்' விருதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி கௌரவித்துள்ளது.

பிரெஞ்சு தேசிய தினமான பெஸ்டைல் தினவிழாவில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி பாரீஸ் சென்றிருந்தபோது பிரெஞ்சு ஜனாதிபதி கடந்த 13ஆம் திகதி இந்த விருதை வழங்கினார். அதிபர் இமானுவேல் மெக்ரோன் தன், எலிசை மாளிகையில் இரவு விருந்தளித்தபோது இக் கௌரவத்தை அளித்தார்.

விருதைப் பெற்றுக் கொண்ட இந்தியப் பிரதமர், இந்திய மக்களின் சார்பில் மெக்ரொனுக்கு நன்றி தெரிவித்தார்.

உலகின் மிக முக்கியமான மனிதர்களுக்கு இவ்விருது பிரெஞ்சு அரசினால் வழங்கப்படுகிறது. நெல்சன் மண்டேலா, சார்ள்ஸ் மன்னர் (இளவரசராக இருந்போது) அங்கலா மேர்கல், ஐ.நா. பொதுச் செயலாளராக பதவி வகித்த பூட்ரஸ் பூட்ரஸ் காலி ஆகியோருக்கும் இவ்விருது வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பிரதமர் மோடி பல்வேறு உயர் உலக விருதுகள் பெற்றவர்.

கடந்த ஜூன் மாதம் எகிப்தினால் வழங்கப்பட்ட ஓர்டர் ஒப் நைல் மோ மாதம் பிஜியினால் வழங்கப்பட்ட கொம்பேனியன் ஒப் தன ஓர்டர், பலாவு குடியரசு மே மாதம் வழங்கிய இபாக்கல் விருது, மோ மாதம் பப்புவா நியூகினியா வழங்கிய ஓர்டர் ஒப் லோகோவு என்பன இவ்வாண்டில் கிடைத்த கௌரவ விருதுகளில் சிலவாகும்.




தர்கா நகர் லிவர் பூல் விளையாட்டுக் கழகத்திற்கு தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் சீருடை தொகுதியை அன்பளிப்புச் செய்தார். மேற்படி, கல்வி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது அவர் இவற்றை கழக முகாமையாளர் எம்.ஐ.எம். ரிஸானிடம் கையளித்தார். நிகழ்வில் கழக செயலாளர் ஏ.கே.எம். அப்லல், இணை பொருளாளர்களான எம்.கே.எம். ஹிஸ்னி, கே.ஆர். இன்ஸாப் மற்றும் ஆலோசகர் எம்.ஆர்.எம். ஹில்மி ஆகியோரும் கலந்து கொண்டனர்.
(படம்: பேருவளை விசேட நிருபர்)

# அமானா வங்கி தொடர்ச்சியாக 6ஆவது வருடாந்த பங்கிலாபத்தை 24% அதிகரிப்புடன் பிரகடனம் செய்துள்ளது



அமானா வங்கி தொடர்ச்சியாக நேர்த்தியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்து தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நிலையில், தனது தொடர்ச்சியான 6 ஆவது வருடாந்த பங்கிலாபப் பிரகடனத்தை அண்மையில் வெளியிட்டிருந்தது. அதனூடாக தனது பங்குதாரர்களுக்கு நீண்ட காலப் பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு இது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டு முதல் வங்கியின் பிரகடனம் செய்யப்பட்ட மொத்த பங்கிலாபப் பெறுமதி ரூ. 1.4 பில்லியனை விட உயர்வானதாக அமைந்துள்ளது.

பங்குதாரர்களுக்கு பங்கொன்றுக்கு ரூ. 0.12 வீதம் இடைக்கால மேலதிக பங்கிலாபத்தை வழங்கியிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் அமானா வங்கியின் பங்கிலாபக் கொடுப்பனவு பெறுமதியான ரூ. 334.1 மில்லியன், 2022 ஆம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாபத்துடன் ஒப்பிடுகையில் 24% அதிகரிப்பை பதிவு செய்திருந்தது.

2023 ஆம் ஆண்டுக்கான மேலதிக பங்கிலாப வழங்கல் என்பது, இலங்கை மத்திய வங்கியினால் சகல வங்கிகளுக்கும் பணப் பங்கிலாபங்களை வழங்குவதை கட்டுப்படுத்தி வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் அமைந்திருப்பதுடன், வங்கியில் கொண்டிருந்த ஒவ்வொரு சுமார் 23.5 பங்குகளுக்கு ஒரு பங்கு எனும் விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட்டது.

அதன் பெறுமதி பங்கொன்றுக்கு ரூ. 2.40 ஆக அமைந்திருந்தது. மேலதிக பங்கிலாப வழங்கல் பூர்த்தியடைந்ததும், வங்கியின் மொத்த பங்குகளின் எண்ணிக்கை 118,317,854 இனால் அதிகரித்து 2,902,267,365 ஆகக் காணப்படும்.

இந்த வழங்கலின் பின்னர் மூலதனத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையின் பெறுமதி மீதான கணிப்பிடப்பட்ட பிடித்து வைத்திருக்கும் வரியின் (With Holding Tax) பெறுமதி ரூ. 284.0 மில்லியனாகும்.

பங்கிலாபப் பிரகடனம் தொடர்பில் அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பராலி கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டில் பொருளாதார சவால்கள் நிலவிய போதிலும் எமது தொடர்ச்சியான ஆறாவது பங்கிலாப பிரகடனத்தை வெளியிடுவது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது உறுதியான நிதிசார் செயற்பாடுகள், மீட்சியுடனான வியாபார மாதிரி மற்றும் பங்குதாரர்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இந்த பங்கிலாபப் பிரகடனம் அமைந்துள்ளது." என்றார்.




# DIMO Energy வர்த்தகநாமத்தின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி தீர்வுகளை ஒருங்கிணைக்கும் DIMO

இலங்கையிலுள்ள முன்னணி பல்வகைத்துறை கூட்டு நிறுவனமான DIMO ஆனது, DIMO Energy எனும் புதிய வர்த்தகநாம அடையாளத்தின் கீழ் தனது மின்சக்தி மற்றும் வலுசக்தி செயற்பாடுகளை மறுசீரமைப்பதாக அறிவித்துள்ளது.

DIMO Energy ஆனது, உயர் மின்னழுத்தம், நடுத்தர மின்னழுத்தம், குறைந்த மின்னழுத்தம் ஆகிய மூன்று பிரிவுகளில் மின்சாரத் தீர்வு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தீர்வுகளை செயற்படுத்துகிறது. DIMO Energy ஆனது மின்சாரம், மின்சக்தி, வலுசக்தி பிரிவுகளில்




விரிவான தீர்வுகளை வழங்கும் அதே நேரத்தில்> நிறுவனத்தின் தற்போதைய தயாரிப்பு வகைகளில் cogeneration தீர்வுகள் மற்றும் agrivoltaics ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

வாடிக்கையாளர்களை மையப்படுத்திய அணுகுமுறையுடன், அனைத்தும் ஒரே கூரையின் கீழ் அமைந்த தீர்வு வழங்குனராக மாற்றுகின்ற DIMO Energy ஆனது, அதிநவீன தீர்வுகளை வழங்குவதை உறுதி செய்கிறது. மின் உற்பத்திச் செயன்முறைகளில் நேரம், முயற்சி, பண விரயங்களை இது நீக்குகிறது. பல தசாப்தங்களாக இணையற்ற நிபுணத்துவம் மற்றும் அறிவாற்றல் ஆகியவற்றின் மூலம், தீர்வாக வழங்கப்படும் ஒவ்வொரு துணை நடவடிக்கையும், சர்வதேச மின்னுற்பத்தி தீர்வுகளுக்கு இணையான வெளிப்பாட்டை வழங்க உகந்ததாக உள்ளது.

# பாதுகாப்பை மீண்டும் வலியுறுத்தும் பேபி செரமி

இலங்கையின் முன்னணி குழந்தை பராமரிப்பு வர்த்தக நாமமான பேபி செரமி பல தசாப்தங்களாக இலங்கையிலுள்ள மில்லியன் கணக்கான பெற்றோர்களின் நம்பிக்கையை வென்று அவர்களால் நேசிக்கப்பட்டு வரும் ஒரு வர்த்தகநாமமாகும். பெற்றோர் தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் சுகவாழ்வை பேபி செரமியின் மென்மையான தயாரிப்புகளின் பராமரிப்பில் ஒப்படைத்துள்ளனர்.

இதுவே குழந்தை பராமரிப்பு பிரிவில் இவ்வர்த்தகநாமத்தை முன்னணியில் திகழ வழிவகுத்துள்ளது. Kantar Sri Lanka வினால் மேற்கொள்ளப்பட்ட வீட்டுப் பாவனை பொருட்கள் தொடர்பான ஆய்வின் அடிப்படையில்இ பேபி செரமி இலங்கையின் நம்பர் 1 குழந்தை பராமரிப்பு வர்த்தகநாமமாக தெரிவாகியுள்ளதோடு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் குழந்தை பராமரிப்பு பிரிவில் சந்தையில் முதலிடத்தில் உள்ளது. அத்துடன்LMD சஞ்சிகையினால் 'Most Loved Baby Care' (மிகவும் விரும்பப்படும் குழந்தைப் பராமரிப்பு) வர்த்தகநாமம் என பெயரிடப்பட்டுள்ள இதுஇ மிகப்பெரிய சந்தைப் பங்கைக் கொண்டுள்ளது என்பதற்கு அப்பால்இ இலங்கையிலுள்ள பெற்றோரின் இதயங்களை கொள்ளையடிக்க முடிந்துள்ளது என்பதை நிரூபிக்கிறது.

2020 ஆம் ஆண்டு முதல் நாட்டின் பாதுகாப்பான குழந்தை பராமரிப்பு வர்த்தகநாமமாக மாற்றம் பெறும் முயற்சியின் மூலம் 'எமது குழந்தைகளுக்கு பாதுகாப்பான உலகத்தை உருவாக்குதல்' எனும் இலட்சியம் மற்றும் பாரிய நோக்கத்தின் மூலம் வர்த்தகநாமம் அதன் நோக்கத்தை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இந்நோக்கத்தின் ஒரு அங்கமாக பேபி செரமி அதன் பாதுகாப்புத் தரங்களை மேலும் மேம்படுத்தி அதன் அனைத்து தயாரிப்புகளின் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் வகையில்

Baby Cheramy Safety Instituteஇனால் மேற்பார்வையிடப்படும் 8 படிகளைக் கொண்ட பாதுகாப்புச் செயன்முறையை நடைமுறைப்படுத்தியுள்ளது. நுகர்வோர் தேவைகளை அடையாளம் கண்டு அவர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் தயாரிப்புகளை உருவாக்குவது எனும் விடயமும் இதில் அடங்குகின்றது. உதாரணமாக இயற்கையான மற்றும் மூலிகைப் பொருட்களை பெற ஆயுர்வேத மற்றும் சுதேச வைத்திய நிபுணர்களின் ஒத்துழைப்புடன் அது தொடர்பான பொருட்கள் அடையாளம் காணப்படுகின்றன.

# "சிறந்த நீர், சிறந்த வாழ்வு" திட்டத்தின் மூலம் பூநகரியை வலுப்படுத்தும் சன்ஷைனின் சிறந்த வலுவூட்டலுக்கான அறக்கட்டளை

யாழ்ப்பாணம் பூநகரி பிரதேசத்தில் வசிப்பவர்களின் வாழ்வில் நம்பிக்கையை மீட்டெடுக்கும் முயற்சியில், Sunshine Foundation for Good (SFG), சன்ஷைன் ஹோல்டிங்ஸின் பெருநிறுவன சமூக பொறுப்பு (CSR) பிரிவானது பள்ளிக்குடா, பல்லவராயன்கட்டு மற்றும் கௌதாரிமுனை ஆகிய இடங்களில் மூன்று Reverse Osmosis (RO) ஆலைகளை நிறுவியது. புதிய RO ஆலைகளின் அறிமுகம், இந்த கிராமங்களில் வசிக்கும் 2000 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குகிறது. SFG இன் 'சிறந்த நீர், சிறந்த வாழ்க்கை' திட்டத்தின் கீழ் சமூகத்திற்கு ஆரோக்கியமான, மிகவும் வலுவான அத்தியாயத்தை திறந்துள்ளது.

சுகாதார சமத்துவத்தை மேம்படுத்துதல், உடல்நல அபாயங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை மேம்படுத்துதல் ஆகிய உலக சுகாதார அமைப்பின் (WHO) நோக்கத்தை அங்கீகரிப்பதன் மூலம், பாதுகாப்பான நீருக்கான வசதிகளை வழங்குவது சன்ஷைன் அறக்கட்டளையின் நன்மைக்கான முன்னுரிமையாக மாறியுள்ளது. இன்று அனுராதபுரத்தில் இருந்து மன்னார், கதிர்காமம் முதல் முல்லைத்தீவு, பொலன்னறுவை முதல் நயினாதீவு வரையிலான விவசாய சமூகங்களில் காணப்படும் பல கிணறுகளில் கன உலோகங்கள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் கூறுகள் இருப்பதால் அசுத்தமாகவும் பாதுகாப்பற்றதாகவும் காணப்படுகின்றன.



இலங்கையில் இந்த அசுத்தங்கள் காரணமாக Chronic Kidney Diseases of Unknown Origin (CKDu) நீண்டகால சிறுநீரக நோய்களின் பல நோயறிதல்களுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த நிலை இறுதியில் நோயாளிகளை தொடர்ச்சியான டயாலிசிஸ் சிகிச்சைகள் அல்லது மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு வழவகுக்கின்றன, ஏனெனில் இது நீரிழிவு அல்லது சிறுநீரக செயல்பாட்டை பாதிக்கிறது. சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் கூற்றுப்படி, சுமார் 400,000 பேர் தற்போது CKDu நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர், இதில் 1570 வயதுக்குட்பட்ட ஆண்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

சன்ஷைன் ஹோல்டிங்ஸின் குழும முகாமைத்துவப் பணிப்பாளர் விஷ் கோவிந்தசாமி கூறுகையில், "வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா, தெற்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் அதிகரித்து வரும் CKDu பாதிக்கப்படுபவர்களுடன் தொடர்ந்து போராடி வருகின்றன, இந்த மாகாணங்களில் 400,000 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் தொடர்பான விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக, "பாதுகாப்பான குடிநீருக்கான மோசமான அணுகல் CKDu இன் ஏற்படுவதற்கு வழிவகுத்தது, மேலும் பல தசாப்தங்களாக, இந்த பிராந்தியங்களைச் சேர்ந்த மக்கள் தொடர்ச்சியான தண்ணீர் பற்றாக்குறையுடன் சவாலான நிலைமைகளை அனுபவித்து வருகின்றனர்." என்றார்.

# காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்தடைந்த Cordelia Cruises கப்பலுக்கு வரவேற்பளித்த Advantis



வட மாகாணத்திற்கான கடல்சார் பயணம் மற்றும் சுற்றுலாவின் புதிய சகாப்தத்தை முன்வைத்து, Cordelia Cruises ஸிலிருந்து இலங்கைக்கான முதல் சொகுசுக் கப்பலான MS Empress, யாழ்ப்பாணம் காங்கேசன் துறை துறைமுகத்தில் (KKS) வரவேற்பு அறிக்கப்பட்டது.

சொகுசுக் கப்பல் யாழ்ப்பாணத்திற்கு தனது முதல் பயணத்தை மேற்கொண்டபோது, துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் கீத் பெர்னார்ட் மற்றும் Advantis குழுமத்தின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கௌரவமான அதிகாரிகள் KKS துறைமுகத்தில் நடைபெற்ற சம்பிரதாய வரவேற்பு நிகழ்வுகளுடன் Cordelia Cruises இன் குழுவினருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

"யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதமான கப்பல்துறையில் MS Empress கப்பலை நேரில் பார்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இது KKS துறைமுகத்திற்கு ஒரு சொகுசு பயணக் கப்பல் வந்தடைந்தது முதன்முறையாகும். இந்த முக்கியமான சந்தர்ப்பம் யாழ் ஒரு விரும்பப்படும் சுற்றுலாத் தலமாக வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவது மட்டுமன்றி அப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஆற்றலையும் கொண்டுள்ளது. கலாச்சார பாரம்பரியம் மற்றும் துரிதமான பொருளாதார நடவடிக்கைகளின் செழிப்பான மையமாக இப்பகுதி செழித்து வளரும் எதிர்காலத்தை நாங்கள் கற்பனை செய்கிறோம்.

"இந்த முயற்சியின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகை விருந்தோம்பல், சில்லறை விற்பனை, போக்குவரத்து மற்றும் உள்ளூர் வணிகங்கள் உட்பட பல்வேறு துறைகளைத் தூண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், மேலும் MS Empress அழைக்கும் மூன்று பிராந்தியங்களான ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளிலுள்ள சமூகங்களுக்கும் மிகவும் சிறப்பான தாக்கத்தை உருவாக்குகிறது" என கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

MS Empress இன் வருகையானது, Hayleys PLC இன் போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் பிரிவான Advantis குழுமம் மற்றும் இந்தியாவின் தலைசிறந்த கப்பல் வரிசைகளில் ஒன்றான Cordelia Cruises ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு முக்கிய கூட்டாண்மை மூலம் இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் புதிய சகாப்தத்தின் தொடக்கத்தை ஆரம்பித்துள்ளது.

# Flash FAM என்ற பெயரில் பருவ வயதினருக்கான இலங்கையின் முதலாவது டிஜிட்டல் கணக்கை அறிமுகம் செய்துள்ள கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கி இலங்கையின் பருவ வயதினருக்கான முதலாவது டிஜிட்டல் கணக்கை Flash FAM என்ற பெயரில் அறிமுகம் செய்துள்ளது. வங்கியின் விருது வென்ற செயலியான Flash டிஜிட்டல் வங்கிக் கணக்கின் விரிவுபடுத்தப்பட்ட ஒரு அங்கமாக இது அறிமுகமாகி உள்ளது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மத்தியில் நிதி சுதந்திரத்தையும், பொறுப்பான பண முகாமைத்துவ ஆற்றலையும் ஊக்குவிக்கும் வகையில் இது அமைந்துள்ளது.

கவர்ச்சிகரமான புதிய பண்புகளைக் கொண்ட இந்த புதிய Flash FAM கணக்கை 10 முதல் 17வயது வரையானவர்களும் தமது தினசரி பணப்பரிமாற்றங்கள் மற்றும் சேமிப்பு என்பனவற்றுக்கு பயன்படுத்தலாம். இதுவே நாட்டின் முதலாவது பருவ வயது டிஜிட்டல் வங்கிக் கணக்காகும். பெற்றோரும் Flash கணக்கு வைத்துள்ளவராயின் தனது பிரதான Flash கணக்கின் வழியாக பிரத்தியேகமாக பதிவொன்றை உருவாக்கி கணக்கில் இணைந்து கொள்ளலாம்.



Flash FAM கணக்குடன் பருவ வயதினருக்கு பல்வேறு வங்கி நடைமுறைகளில் ஈடுபடலாம். தமது கணக்கு மீதிகளை சரிபார்த்தல், பெற்றோர் அல்லது பாதுகாவலரிடமிருந்து ஒரு அவசர தேவைக்கு பணத்தை கோரல், நிதிப் பரிமாற்றங்கள், Lanka QR கொடுப்பனவுகள் உட்பட ஏனைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் என்பனவும் இதில் அடங்கும். Flash FAM டிஜிட்டல் கணக்குகளுக்கு இணையவழி கொடுப்பனவுகள், மற்றும் ATM இயந்திரப் பாவனை என்பனவற்றுக்காக டெபிட் மற்றும் கிரடிட் கார்ட் என்பனவும் வழங்கப்படுகின்றன.

தமது சொந்த செயலி மற்றும் கார்ட் என்பன மூலம் இளவயதினர் தமது டிஜிட்டல் நிதிப் பயணத்தை உற்சாகமாகத் தொடங்கக் கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள Flash FAM இளவயது வாடிக்கையாளர்களுக்கு நிதிச் சுதந்திரத்தை அளிக்கின்றது. அத்தோடு உழைத்தல், சேமித்தல், பொறுப்புடன் செலவழித்தல் போன்ற ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும் உதவுவதாக வங்கி அறிவித்துள்ளது. தமது 18வது வயதின் பின் Flash FAM பாவனையாளர்கள் இயல்பாகவே கொமர்ஷல் வங்கி குடயளா கணக்கிற்கு மாறிக் கொள்ள முடியும். வங்கி தானாகவே இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# Freedom Plus Unlimited பெக்கேஜின் சலுகைகள் மேலும் அதிகரித்துள்ள எயார்டெல்

இலங்கை இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான மொபைல் தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான Airtel Sri Lanka, தமது வாடிக்கையாளர்கள் செலுத்தும் பணத்திற்கு தொடர்ந்து மதிப்பு சேர்க்கும் வகையில், எயார்டெல் அதன் முற்கொடுப்பனவான ரூ. 888 Freedom Plus பெக்கேஜில் மூன்று பிரபலமான சமூக வலைத் தளங்களின் Appsகளைச் சேர்த்துள்ளது, இது அதிக மதிப்பு, சுதந்திரம் மற்றும் வரையறையற்ற அணுகலை வழங்குவதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கை முழுவதும் வேகமாக அதிகரித்து வரும் வாடிக்கையாளர் தேவைக்கு ஏற்ப, விஸ்தரிக்கப்பட்ட 888 பெக்கேஜ் இப்போது Airtel பாவனையாளர்கள் Telegram, IMO மற்றும் Viber ஆகிய மூன்று சமூக ஊடக Appsகளுக்கு வரையறையற்ற அணுகலை அனுபவிக்க வசதியளிக்கிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த எயார்டெல் ஸ்ரீலங்காவின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி அஷிஷ் சந்திரா, "எங்கள் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு அதிக நன்மைகளை வழங்குவதற்காக எங்களது Airtel ரூ. 888 Airtel Freedom Plus பெக்கேஜ்ஜின் நன்மைகளை அதிகரித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாடிக்கையாளர்களிடமிருந்து எங்களுக்கு அதிக தேவை இருப்பதால், இப்போது பிரபலமான பயன்பாடுகளான Viber, IMO மற்றும் Telegram ஆகியவற்றை இந்த பெக்கேஜில் சேர்த்துள்ளோம். வாடிக்கையாளர்கள் இப்போது இந்த அதிகமான சேவைகளை மலிவு விலையில் ரூ. 888 இல் அனுபவிக்க முடியும், மேலும் அவர்கள் ஏற்கனவே இந்த பெக்கேஜ் மூலம் அதிக மதிப்பை அனுபவித்து வருகின்றனர் என்பது எங்களுக்குத் தெரியும்.




"எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற, வசதியான மற்றும் மலிவான ஷாப்பிங் அனுபவத்தை வழங்குவதற்கான எமது வாக்குறுதியை நாங்கள் தொடர்ந்து வழங்குகிறோம். TikTok, Instagram, Facebook, YouTube, Messenger, WhatsApp, Viber, IMO மற்றும் Telegram போன்ற பிரபலமான சமூக ஊடக தளங்களுக்கு வரையறையற்ற அணுகலை வழங்குவதன் மூலம், எங்கள் வாடிக்கையாளர்கள் அந்த Appsகளைப் பயன்படுத்தும் முறையையோ அல்லது தனித்தனியாக கொள்முதல் செய்வதையோ மாற்ற வேண்டியதில்லை. வெவ்வேறு Appsகள். அவர்களின் தொடர்பு தேவைகளை எளிதாக பூர்த்தி செய்ய முடியும். இதனால் தான் Airtel Freedom பெக்கேஜின் மதிப்பை சந்தையில் வேறு எந்த பெக்கேஜும் ஈடுகட்ட முடியாது" என தெரிவித்தார்.

# டெஸ்ட் தலைமை குறித்து திமுத் மீண்டும் கோரிக்கை

## துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்த விருப்பம்



இலங்கை டெஸ்ட் அணி தலைமை தொடர்பில் மீளாய்வு செய்யும்படி டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன இலங்கை கிரிக்கெட் தேர்வாளர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கு பின்னர் கடந்த வியாழக்கிழமை (20) ஊடகங்களிடம் பேசிய கருணாரத்ன, இது பற்றி தாம் முன்னரும் கோரிக்கை விடுத்த நிலையில் தொடர்ந்து தலைமை பதவியில் செயற்படும்படி தேர்வாளர்கள் வலியுறுத்தியதாக தெரிவித்தார்.

இந்நிலையில் தற்போதைய பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு பின்னர் தலைமை குறித்து மீளாய்வு செய்யும்படி தேர்வாளர்களிடம் தாம் மீண்டும் ஒருமுறை கோரிக்கை விடுப்பதாக கருணாரத்ன தெரிவித்தார். எஞ்சியுள்ள தமது கிரிக்கெட் வாழ்வில் துடுப்பாட்டத்தில் அதிக அவதானம் செலுத்த எதிர்பார்ப்பதாக கருணாரத்ன கூறினார்.

“தலைமை பொறுப்புக்கு பொருத்தமான சில வீரர்கள் உள்ளனர். சில வீரர்கள் வளர்ந்து இந்த பொறுப்பை ஏற்பதற்கு திறன் படைத்தவர்களாக இருப்பதை நான் தனிப்பட்ட முறையில் பார்க்கிறேன்” என்று அவர் தெரிவித்தார்.

இலங்கை அணி அடுத்து 2024 பெப்ரவரியிலேயே டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆடவுள்ளது என்பதை சுட்டிக்காட்டிய கருணாரத்ன புதிய தலைவர் ஒருவரை வளர்த்தெடுக்க தேர்வாளர்களுக்கு போதுமாக காலம் இருக்கிறது என்றார்.

“புதிய தலைவர் ஒருவரை நியமிக்க தேர்வாளர்கள் இணங்கினால், தேர்வு செய்யப்படும் வீரருக்கு தலைமை பொறுப்பை வழங்கவும் அணிக்காக துடுப்பாட்ட வீரராக திறமையை வெளிப்படுத்துவதற்கும் நான் விரும்புகிறேன்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 4 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்தது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் திங்கட்கிழமை (24) கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

# இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்தது இலங்கை ஏ அணி



வளர்ந்து வரும் அணிகளுக்கு இடையிலான ஆசிய கிண்ண தொடரில் பாகிஸ்தான் ஏ அணிக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் இலங்கை ஏ அணி 60 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

கொழும்பு, பீ. சரா ஓவல் மைதானத்தில் நேற்று (21) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் ஏ அணி 50 ஓவர்களுக்கும் சகல விக்கெட்டுகளையும் இழந்து 322 ஓட்டங்களை பெற்றது. ஓமர் யூசும் 79 பந்துகளில் 88 ஓட்டங்களை பெற்றார்.

அணித்தலைவர் மொஹமட் ஹாரிஸ் 43 பந்துகளில் 52 ஓட்டங்களை குவித்தார். இதன்போது இலங்கை ஏ அணி சார்பில் லஹிரு சமரகோன், பிரமோத் மதுஷான் மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய துனித் வெள்ளாலகே தலைமையிலான இலங்கை ஏ அணி 33 ஓட்டங்களுக்குள் முதல் மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாறியது.

எனினும் 4 ஆவது விக்கெட்டுக்கு அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் சஹன் ஆரச்சிகே 128 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டு நம்பிக்கை தந்தனர். எனினும் அதிரடியாக ஆடி வந்த அவிஷ்க பெர்னாண்டோ 85 பந்துகளில் 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததை அடுத்து இலங்கை ஏ அணியின் எதிர்பார்ப்பு சிதறியது.

மறுமுனையில் சஹன் ஆரச்சிகே தனித்து போராடியபோதும் அவரும் சதம் பெற மூன்று ஓட்டங்கள் இருக்கும் நிலையில் வெளியேறினார்.

இறுதியில் இலங்கை ஏ அணி 45.4 ஓவர்களில் 262 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இலங்கை ஏ அணியில் அவஷ்க மற்றும் ஆரச்சிகே தவிர வேறு எவரும் 18 ஓட்டங்களைக் கூட பெறவில்லை.

பாகிஸ்தான் ஏ அணி சார்பில் அர்ஷாத் இக்பால் 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். இந்த வெற்றியுடன் பாகிஸ்தான் ஏ அணி நாளை (23) ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ள தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# கொழும்பு–ஜாவாலேன் அணிகளிடையே இறுதிப் போட்டிக்கான மோதல் இன்று



சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரின் இறுதிச் சுற்று போட்டிகளை ஆரம்பித்து இன்று பி.ப. 3.30க்கு கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் ஜாவாலேன் இடையிலான போட்டி மற்றும் நாளை அதே நேரத்தில் மொரகஸ்முல்ல விளையாட்டு கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் ஜாவாலேன் இடையிலான போட்டியில் வெற்றியீட்டும் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதோடு தோல்வியுறும் அணி மொரகஸ்முல்ல விளையாட்டு கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகளுக்கு இடையிலான போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் இறுதிப் போட்டிக்காக பலப்பரீட்சை நடத்தும்.

கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெறும் இந்தத் தொடரில் நடப்புச் சம்பியன் சோன்டர்ஸ் விளையாட்டுக் கழகம் கடந்த வார இறுதியில் எதிர்பாராத வகையில் மாளிகாவத்தை யூத் அணியிடம் 3–1 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றதால் இந்தத் தொடர் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற ஆரம்ப சுற்றுக்கான மற்ற போட்டியில் ஜாவாலேனை 1–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சிட்டி லீக் தலைவர் கிண்ணத்தை மூன்று முறை கைப்பற்றிய கொழும்பு கால்பந்து கழகத்தால் வெற்றியீட்ட முடிந்தது.

இந்த கால்பந்து தொடரில் 4 போட்டிகளில் இரண்டு வெற்றி மற்றும் இரு சமநிலையுடன் நிறைவு செய்து 8 புள்ளிகளுடன் கொழும்பு கால்பந்து கழகம் தோல்வியுறாத அணியாக முதலிடத்தை பெற்றது. பலம்மிக்க ஜாவாலேன் விளையாட்டுக் கழகம் 4 போட்டிகளில் 2 வெற்றிகள், ஒரு தோல்வி மற்றும் ஒரு சமநிலையுடன் 7 புள்ளிகளை பெற்று இரண்டாவது இடத்தை பிடித்தது. இதன் காரணமாக முதல் இடத்தில் இருக்கும் கொழும்பு மற்றும் இரண்டாம் இடத்தில் இருக்கும் ஜாவாலேன் அணிகள் அரையிறுதியில் மீண்டும் மோதுகின்றன.

மொரகஸ்முல்ல விளையாட்டு கழகம் 4 போட்டிகளில் ஒரு போட்டியில் வெற்றியீட்டி ஒரே போட்டியை தோற்று இரண்டு ஆட்டங்களை சமநிலை செய்து 5 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தை பெற்றதோடு மாளிகாவத்தை யூத் அணி 4 போட்டிகளில் ஒன்றில் வென்று 3 இல் தோல்வியுற்று 3 புள்ளிகளுடன் நான்காவது இடத்தை பிடித்தது.

6ஆவது முறையாக நடைபெறும் சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரில் சம்பியனாகும் அணிக்கு 150,000 ரூபா பரிசும் இரண்டாம் இடத்தை பிடிக்கும் அணிக்கு 100,000 ரூபா பரிசும் வழங்கப்படுவதோடு அனைத்து போட்டிகளிலும் திறமையை வெளிப்படுத்தும் வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## ஆசிய கிண்ண ஏற்பாடு:

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் இலங்கை வருகை



ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடருக்கான ஏற்பாடுகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஆசிய கிரிக்கெட் கௌன்சில் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இதில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை (20) இலங்கையை வந்தடைந்ததோடு ஆசிய கிரிக்கெட் கௌன்சில் அதிகாரிகள் நடைபெற்று வரும் வளர்ந்துவரும் அணிகளுக்கான ஆசிய கிண்ண தொடரை ஒட்டி ஏற்கனவே இலங்கை வந்துள்ளனர்.

இதன்படி இந்த அதிகாரிகள் ஆசிய கிண்ண போட்டிகள் நடைபெறவுள்ள கண்டியில் உள்ள பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கு மற்றும் கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தை மேற்பார்வை செய்துள்ளனர்.

தொடர்ந்து இந்த தொடரை நடத்துவது தொடர்பில் பாக். கிரிக்கெட் சபை மற்றும் ஆசிய கிரிக்கெட் கௌன்சில் அதிகாரிகள் இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவுள்ளனர்.

ஆசிய கிண்ண தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டு ஒரு நாளைக்கு பின்னரே இந்த அதிகாரிகள் இலங்கை வந்துள்ளனர்.

50 ஓவர் வடிவத்தில் நடைபெறும் ஆசிய கிண்ண தொடரை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றிருந்தபோதும் இந்தத் தொடர் இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் கலப்பு முறையில் நடத்தப்படவுள்ளது. இதன்படி தொடரின் நான்கு போட்டிகளில் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளதோடு இறுதிப் போட்டி உட்பட ஒன்பது போட்டிகள் இலங்கையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் 30 ஆம் திகதி ஆரம்பமாகும் ஆசிய கிண்ண தொடர் செப்டெம்பர் 17 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

# 250 வீரர்களுடன் அறுகம்பே அரை மரதன் போட்டி நாளை

பாலமுனை விசேட நிருபர்



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வீரர்கள் என 250 பேர் கலந்துகொள்ளும் சர்வதேச தரத்திலான அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டி நாளை (23) ஞாயிற்றுக்கிழமை பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் இராணுவத்தின் 242ஆவது படைப்பிரிவின் பூரண ஒத்துழைப்புடனும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அனுசரணையுடனும் அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் இந்த மரதன் போட்டியினை ஏற்பாடு செய்துள்ளது.

பிரதேச மட்டத்தில் உள்ள வீரர்களையும் இப்போட்டியில் இணைத்துக்கொள்ளும் பொருட்டு, இம்மரதன் ஓட்டப் போட்டியானது 3 பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளது. 21.1 கி.மீ அரை மரதன், 10 கி.மீ மரதன், 5 கி.மீ மரதன் என மூன்று பிரிவுகளைக் கொண்ட இப்போட்டியில் 5 கி.மீ மரதன் நிகழ்ச்சியில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களும், 17 வயதுக்கு உட்பட்டவர்களும் கலந்துகொள்கின்றனர். ஏனைய இரு பிரிவுகளிலும் 17 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றுகின்றனர்.

இப்போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெறும் வீரர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழுடன் பெறுமதியான பணப்பரிசும் வழங்கப்படவுள்ளதுடன் குறித்த தூரத்தினை முழுமையாக ஓடி முடிப்பவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டும் ‘இலங்கைக்கு வாருங்கள்’ எனும் தொனிப்பொருளில் இம்மரதன் போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி ஜூலை 28 அன்று ஆரம்பம்



இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 101ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் தொடரில் இந்தியாவிலிருந்து 2 அஞ்சலோட்ட அணிகளுடன் 28 பேர் கொண்ட அணியொன்று பங்குபற்றவுள்ளதாக இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

101ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் தொடர் எதிர்வரும் ஜூலை 28, 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இம்முறை போட்டித் தொடரில் வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியிலிருந்து 750 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். அதேபோன்று இந்தியா மற்றும் மாலைதீவுகள் ஆகிய நாடுகளில் இருந்து 2 அணிகள் இம்முறை தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் தொடரில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

101ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் தொடர் மற்றும் அண்மையில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப்பில் இலங்கை அணி வெளிப்படுத்திய திறமைகள், முன்னேற்றம் குறித்து ஊடகங்களை தெளிவுபடுத்தும் விசேட செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் (20) கொழும்பில் இடம்பெற்றது.

இதில் இம்முறை நடைபெறவுள்ள 101ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் தொடருக்கு இந்தியாவில் இருந்து 28 வீரர்கள் பங்கேற்பது உறுதி செய்யப்பட்டது. 2 அஞ்சலோட்ட அணிகள் மற்றும் அண்மையில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப்பில் பதக்கம் வென்ற வீரர்களும் இலங்கை வரவுள்ளனர்.

மேலும், மாலைதீவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அணியொன்றும் இம்முறை தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப்பில் பங்கேற்கவுள்ளது.

மேலும், ஒக்டோபர் மாதம் இந்தியாவின் ராஞ்சியில் நடைபெறவுள்ள தெற்காசிய சிரேஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்சிப் தொடருக்கான தெரிவுப் போட்டியாக இம்முறை தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் தொடர் நடைபெறவுள்ளது என பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனிடையே, சீனாவில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றவுள்ள இலங்கை மெய்வல்லுனர் அணி ஏற்கனவே பெயரிடப்பட்டுள்ளதாகவும், தேசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப்பில் வெளிப்படுத்துகின்ற திறமைகளின் அடிப்படையில் இறுதி அணி தெரிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.